KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 3] 1930 ஹ நவம்பர் மீ 6உ [No 44

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 861
2. குறுந்தொகை (பாட்டு 293—308)
K. இராமரத்நம் ஐயர் B.A. 863
3. அப்பர் (சிற்பமும் உருவ சாஸ்திரமும்)
E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 868
4. தமிழ்ப்பாடம் (இலக்கணம்) 870
5. நம்மாழ்வார் வைபவம் (7ம் பத்து 3ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 872
6. கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 875
7. வர்த்தமானம் 879

19 FEB 18
189128

## கலாநிலயம்

### பொன்னெழுத்தாற் பொறிக்கலாமோ.

பொய்யில்லாது வழக்கில்லை. கொண்டுவந்த வழக்கு ஒருகால் மெய்யாயிருக்கலாமானாலும், அதைச் சட்டப்படி நிரூபிப்பதற்கு இடையிடையே சிலபொய்களைச் சேர்த்துக் கொள்ளலாவதை எவரும் புதுமையென நோக்கார். இவ்வண்ணம் பொய்யுடன் மிக நெருங்கிப் பயிலநேர்வதால் வழக்குக்களில் பழகுவார் அனைவரும், மெல்ல மெல்லத் தருமமும் அன்னதேயெனத் தம்முளே கொள்ளத் தலைப்படுகின்றனர். இதற்கிடையில் எத்தனை வன்சொல், எத்தனை பொறாமை, சிறுமதிச் சூழ்ச்சிகள் எத்தனை, ஒவ்வொருவனும் உட்கொள்ளவேண்டு மென்பது யாவரும் அறிந்ததே. சிறு இலஞ்சங்கள் பலப்பல; பெரு இலஞ்சங்களும் சிலவேளை. இப்படித் தொடர்கின்ற வழக்குப் பொய்யேயாயினும் மெய்யேயாயினும், தீமையே பூண்டொழுகும்படி வாழ்நாளிற் சில ஒருவனுக்குக் கழிந்தவென்றால், பிறகு அவன் இருந்தாலென் இல்லா தொழிந்தாலென். வழக்கிலே தோற்றவன் கைப்பொருள் தோற்றான் என்றால் வென்றவனும், தன் மனத்தூய்மையில் பெரும்பாலும் தோற்றுவிட்டான். இனிய உளவாக அவையெல்லாம் நினையாமல் முப்பொழுதும், பாழும் இவ்வழக்கிற்குரிய புல்லிய சிறு தொழில்களின் நினைவே குடிகொண்டவொரு மனம்,பின்னர் மாண்புடைய எண்ணங்களுக்கு இடந்தரவியலுமென்று உரைப்பதோ மிகு அருமையாகின்றது.

குற்றவகைகளுக்குரிய குறைகளும் சிறைகளும் குற்றங்களையே மிகவும் பெருக்குகின்றன. வறுமையால் பிரமையினால் விளையாட்டாய் ஒருவன் ஒரு பொருளைத் திருடிவிட்டான் என்று வைத்துக்கொள்வோம்: அல்லது மனத்தை அடக்கியாளும் வன்மையின்மையால் விரைந்தொருவன் வேறு சில குற்றங்களையும் செய்துவிடலாம். இப்படி ஓர்முறை குற்றத்தைச் செய்தவன் மனம் துண்ணென அவனை இடைவிடாது இடிக்கலாகும். இக்குற்றம் வெளியாகின் உற்றார் என் நினைப்பார், ஊரார் என் சொல்வார் என மானத்தால் அவன் பதை பதைப்பான். பின் தன் கதி என்னாவதென்ன மாழ்கித் துடிப்பான். "நாயேன், நான் இக்கருமம் ஏன் செய்தேன்,. இறைவா! இவ்வொருமுறை என் குற்றம் வெளியாகாமல் காவாயோ, பின் எந்நாளும் உன்னடிமை, இனிச் செய்யேன் செய்யேன் இத்தகைய தீத்தொழில்" என்று வேண்டி வேண்டி இறைவனது தாளைத் தன் மனத்தால் பற்றவும் பற்றுவான். தன்னை மறந்திருந்த ஒரு ஆன்மாவை எம்பெருமான் சிலவேளை இவ்வகையில் அழைத்தாட்கொள்ளச் சித்தம்வைத்தனர் போலும். போலீசாரும், தெருவாரும் புகுந்துபுகுந்து இவன் குற்றத்தைக் கண்டுபிடிக்காது விட்டிருப்பாராயின் "இறைவனருளால் இன்று தப்பினேன் யான்" என அவன் எண்ணித் தெய்வத்திருவருளில் ஆழ்ந்த நம்பிக்கை நிலைக்கப்பெற்றுப் பின்னுள நாட்களெல்லாம் தூயவனாகியே தீர்தலாவதும் இயலும். ஆனால் இறைவனுக்கும் இத்தகையநிலையினோர்க்கு மிடையே சட்டமும் காவலுந்தான் குறுக்கிட்டுக் கிடக்கின்றனவே. எப்படியோ ஒற்றாடி இவனுடைய குற்றத்தைக் கண்டு

பிடித்து விடுகின்றனர். பின் என்? "இத்தனை வேண்டியும் என்னை காட்டித்தந்த விதுவொரு கடவுளோ" என்று தெய்வநம்பிக்கையைக் கைவிதிர்த்தோட்டிவிடுகின்றான். அப்புறம்தண்டனையினின்றுதப்பித்துக்கொள்ளும் பொருட்டு மேன்மேலும் பலகுற்றங்கள் செய்யத்துணிகின்றது அவன்மனம். கொலைக்கு மினிப் பின்னிடான். 'நான்குரூபாய் விலையுள்ள இதனை நான் திருடினாற்றான் என்ன. அல்லது பொய்க்கணக்கு ஒருவரி எழுதினாற்றான் என்ன. ஆபத்துவேளையில் பொய்க்கையெழுத்து ஒன்று இட்டால்தான் என்ன. என்னையிப்படியோ வேட்டையாட வேண்டும்' என்று வெஞ்சினம் மூள்கின்றது. மனிதரை எல்லாம் வெறுக்கின்றான். தாளொரு திறமும் உலகத்தைத் தனக்கு மறுதிறப் பகையாகவும் அவன் பாராட்டப் புகுவதும் இயற்கையே. குரோதத்தில் காழ்க்கின்றது அவன் நெஞ்சு. வாழ்க்கையில் அவனுக்கு இனி யாதும்பசையில்லை. 'வந்தபின் பார்க்கின்றேன் யான் உங்களை ஒருகை' என்ற துணிவோடு, சிறைச்சாலைக்குள் சென்று, தன் கடவநாளைக் கழிக்கின்றான் இவன்.

அங்கு என்னகின்றது. குற்றங்கள் பல செய்து செய்து முதிர்ந்த குற்றவாளிகளுடன் நெருங்கிப் பழகியும் பேசியும் வருகின்றானதலின் தீவினையின்பால் அவனுக்கு எஞ்சிய சிறு அச்சமும் தீர்ந்துவிடுகின்றது. 'நூறுமுறை திருடியிருக்கிறேன் யான்; ஆயினும் பத்துமுறைக்குமேல் யான் பிடிபட்டதில்லை' என்றும், இதற்கு முன்முறை தன்னைப் பிடித்துத் தந்தவன் கையை முறித்தெறிந்துவிட்டானென்றும் ஒருமுறை விசாரணையில் தான்நிரபராதியென்று தீர்ப்புப்பெற்ற வரலாறும் இன்ன பலவீரங்கள் அங்கிருப்போர் பகரப்பகர இவனது உள்ளம் தீமையிற் சலிக்காத உரமபெற்று, இயற்கையாய நல்ல அம்சங்கள் எல்லாம் நசித்தவனாய்ப் பகையால் புகைகின்ற மனத்தோடு புறம் ஏறுகின்றான். மானம் அழிந்துவிட்டதாகையால் அதனைக் காக்கவேண்டுமென்னும் கருத்து இனி அவனுக்கு இருப்பதற்கில்லை. குற்றமேயல்லாக்கால் வேறோர் தொழிலுக்கும் வழியில்லை. கடவுளையோ முற்றிலும் கைவிட்டுவிட்டான். மனிதரை நம்புவதும் இயலாது. பின் என்? முன்முறை தான் தக்கபடி ஏற்பாடுகள் அமைக்காமல் குற்றம் செய்ததாற்றான் அகப்பட்டுக்கொண்டான் என வுன்னி'இம்முறை காண் என் மதியை' எனத் துணிந்து குற்றமே புரியப் பின்னும் துவக்குகின்றான். ஒருகால் இக்குற்றம் வெளியாகாமல் தப்புவதும் இயலும்.எனின், தன் மதியிலே விதியை வைத்து வேறுவேறு குற்றங்களை மேற்கொண்டு தானும் அழிந்து, ஊரையும் உழக்குவது அவன் தொழிலாகிவிடுகின்றது. இத்தனை பொறுப்பும் அவனைத் திருத்துவதற்கென்று விதித்த தண்டனையின் தலையிலே.இதனுண்மையைச் சோதிக்க வேண்டுமாயின் குற்றவாளிகளின் சரித்திரங்களைக் கூரிய மதிகொண்டு நன்கு ஆராய்தல் வேண்டும். சிறையினுள் ஒருவனைப் புகுத்துவதால் இவ்வுலகம் தீயதோர் பகைவனை பெற்றதல்லால் வேறில்லை. சிறையினுட் சென்றதால் திரிந்தினர் யார். திருந்துவானெனில் செஷன்ஸ் விசாரணை தோறும் பதினைந்தாம் முறை, இருபதாம் முறை, இருபத்தைந்தாம் முறையென்று ஒருவனே மீண்டும் மீண்டும் குற்றவாளியாக வந்துகொண்டிருப்பானே?

குற்றமும் குறைந்தபாடில்லை குற்றவாளியும் திருந்தியபாடில்லை, என்பதோடு நில்லாமல் நாளுக்குநாள், குற்றமும் குற்றவாளிகளும் அதிகமாகிக்கொண்டே வருதற்குக் காரணமாயிருக்கின்ற இக்காவலும் சிறைக்கூடமும், என்நினைத்து என் செய்கின்றன. 'பருவம் நோக்காமல் எப்போதும் பழுத்துத் தொங்குகின்ற மரங்கள் இத் தூக்குமரங்களே; ஆயினும் கொலைசெய்வார் கணக்கோ மிகுகின்றதே" என்று ஏங்கினர், இங்கர்ஸால் என்னும் அமெரிக்கர் ஒருவர். ஆதலின் இவை இந்நாட்டிற்கே உரியவென்று கொள்ளவேண்டா.

குற்றங்கள் நிகழ்கின்றன வென்னில் அவை முற்றிலும் அக்குற்றவாளிகளின் பொறுப்பே என்றெண்ணுவது பிழை. ஆங்காங்கு, நேர்கின்ற தீமைகள் பொதுஜன மனப்பான்மையின் பலதிறப்பட்ட பிரதிபிம்பங்களே. பொதுஜன மனத்தின் நோக்கமும் நினைவும் தாழ்ந்தவைகளில் தங்குமானல் அது ஒவ்வொருவரிடத்தில் குற்றச்செயல்களாக வெளியாகின்றது. ஆசையும் அகங்காரமும் அவ்வியமும் சுயநல ஊக்கமும் உடையராய்த் தெய்வத்தைக் கைவிதிர்த்து லோகாயதப் புன்மையில் பொதுஜனவாழ்க்கை படியப்படிய, இந்த எண்ணங்களெல்லாந் திரண்டு அங்கு மிங்கும் பொய்யென்றும் களவென்றும்கொலையென்றும்வெளியாகின்றன. திருடினேனொருவன் குற்றஞ் செய்த கையையே ஒப்பான். அவனைத் திருடவைத்த மனம் பொதுஜனத் தொகுதியின் மறநினைவுகளேயன்றி வேறன்று. கள்வனுடைய கைமாத்திரமே குற்றத்தின் பொறுப்பிற்குரியதென்று கொள்வாருண்டோ. நம்முடைய எண்ணங்களுக்கு மின்சாரத்தைப் போன்றவோர் ஆற்றல் தனியாகவுண்டு.மனத்தில் உதித்திட்ட எண்ணங்கள் மறைந்தபிறகும் அவைகளினுடைய ஆற்றலோ அங்ஙனே அழிந்துவிடுகின்றதில்லை. அவைதாம் புறத்தே பாய்ந்து ஆகாயவெளியில் உலவிக்கொண்டிருக்கின்றன. நல்ல எண்ணங்களும் அவ்வாறே; தீய எண்ணங்களும் அவ்வாறே. இவ்வெண்ணங்களின் தொகுதி வலியடைந்து மற்றவருள்ளத்தில் பாய்ந்து அவர்களை இயக்கிவைக்கின்றது. இந்த உண்மையைப் பண்டைய இந்தியர் நன்கறிந்திருந்தனர். தற்கால மேனாட்டு அறஞரிற் சிலரும் இதனை ஒவ்வுகின்றனர். ஆதலின் உலகவெளியில் நடமாடும் எண்ணங்கள் தூயனவாயின் மனிதர் பொதுவில் நன்மையின்பால் இயக்கப் பெறுகின்றனரென்பதும், தீயனவாயின் பாவமுடையவராகின்றன ரென்பதும் மெய்யுணர்வுடைய வித்தகர்களின் துணிவு. எனின், பாவங்களை வெறுப்பது நேர்மையேயாயினும் பாவங்கள் புரியும் பாவிகளை ஒறுப்பது நேரிதன்று. பாவிகளெல்லாம் பொதுஜன மனப்பான்மைக்குப் பலியாகி நிற்பவர். பாவங்கள் நடமாடுவதெல்லாம் பொதுஜன மனப்பான்மையின் தூய்மைஇன்மைக்கு அடையாளம். இதைத்தான் மேனாட்டுப் புலவர் ஒருவர் கால்ஸ்வோத்தி என்பவர்"பாவத்தின் பரிதாபம்"(Tragedy of Sin) என்று அழைக்கின்றார்.

இவைகளிலிருந்து, குற்றமும் பாவமும் குறைய வேண்டுமாயின் திருந்துதற் கிலக்காகிநிற்பது பொதுஜன மனப் பான்மையே என்பது நன்கு புலப்படலாகும். தற்காலக் கல்விமுறையாலும் அரசியல்வாதங்களாலும் வர்த்தமானப் பத்திரிகைகளாலும் பொதுஜனமனது கீழ்மைக்கே இரையாகும்படி யாவும் நிகழலாவதால் வழக்குமன்றங்களும் காவற் கூடங்களும் என்ன நன்மையைச் சாதிக்க இயலும். சிறைச்சாலைக்குள்ளிருப்பார் வருந்தினாலும் வருந்தாவிட்டாலும், வெளிநின்று அதனைக் காண்பார் காணுந்தோறும், "இதுவோ, எங்கள் மனத்தீமை யிருந்தவாறு! எங்கள் இழிதகை எண்ணங்களல்லவோ இவர்களைக் குற்றத்துள் புகுத்திவைத்தன. வாஸ்தவத்தில் குற்றத்தின் பொறுப்புடையவர் நாங்களாகஇருக்க இப்பேதைமாக்கள் வீணே தண்டிக்கப்படுகின்றனர்" என்று எண்ணியெண்ணி ஆறாத துயரில் ஆழ்ந்து கரைந்து போதலே கடன். எனின் உலகத்திலுள்ள பாவங்களை ஒருவாறு அளந்துகாட்டும் இடமாகிய சிறைச்சாலை பொதுஜனங்களின் அவமானத்திற்கே அடையாளமாக நிற்கின்றது.தன்னுடைய அவமானத்திற்கு அடையாளமானதொன்றைப் பிறர்காணுவகை மறைத்துவைப்பதே மாநுட இயற்கை. ஆனல் தன் அவமானத்தினடையாளமானதொன்றை, அன்னதென் றுணராமல் தன்பெருமையின் உருவகம் என்று எண்ணநேர்ந்தால் அவன் மதியை என் சொலி வியப்பது—அவனுக்கு நற்கதியெய்துவது எவ்வாறு.சென்னையிலுள்ளசிறைக்கூடத்தின் வாயில் Penitentiary என்று தங்க எழுத்துக்களால் பொறித்தபேருடன் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. கரிக்கோட்டால் மறைக்கவேண்டிய ஒன்றைப் பொன்னாற் புனைந்து சந்தியில் நிறுத்துவதே தக்கதென்று நினைக்குமிந்நாளில் எத்துறையிலும் திருத்தமுற்றநன்மை கூடுவதுஅரியதாகிக் கிடக்கின்றதென் றியம்பவும் வேண்டுமோ.

இவைகளையெல்லாம் அடியுடன் விட்டுவிட்டுப் பொதுஜன மனத்தூய்மையைப் பெருக்குவதில் மாத்திரமே கண்ணுங் கருத்துமாயிருத்தல் சான்றோர் கடன். அப் புகலரிய பெருநல மெய்துவதற்குக் கலையின் நுண்ணுணர்வல்லால் வேறு கருவியில்லை. கள்வரில்லாத தேசமாய்க் கோசலந்தான் கம்பரது மதியகத்திற் நிகழ்ந்ததற்குக் காரணம் கலையெனும் நலத்தின் தலையாய சிறப்பேயாகும்.

OF THE R... 19 FEB 1931

## குறுந்தொகை

[850-வது பக்கத் தொடர்ச்சி]

கள்ளில் ஆத்திரையனர்] 293 [மருதம்

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனது வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைவி சொல்லியது.

கள்ளிற் கேளி ரார்த்திய உள்ளூர்ப்
பாளை தந்த பஞ்சியங் குறுங்காய்
ஓங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி யருமன் மூதூ ரன்ன
வயல்வெள் ளாம்பல் பகைநெ றித்தழை
திதிக் குறங்கின் ஊழ்மா றலைப்ப
வருமே சேயிழை அந்திற்
கொழுநர்க் காணிய; அளியேன் யானே.

(உரை). கள்ளிறக்குவோராகிய சாணுர், தமக்கு உறவினரான அன்பரை உண்பிக்கும்பொருட்டு நெடிய கரிய பனைமரத்தின் பாளையீன்ற கள்ளோடு பஞ்சித்துய்போன்ற துய்யினையுடைய சிறிய பனங்காயின் நுங்கையுங்கொண்டு உள்ளூரை நோக்கிச்செல்லும் 'ஆதியருமன்' என்பவனது மூதூரை அன்னவளாகிய நல்ல அணிகளைப்பூண்ட பரத்தை, வயலினிடத்து மலர்ந்த வெள்ளாம்பல் மலரோடு, அதற்கு மாறான நெறித்த •தழையையுஞ்சேர்த்துத் தொடுத்த தொடையல் தேமல்பரந்த துடைப்புறத்துச் சிதைந்திடுமாறு அசைந்து வருத்த(த் தன் காதற்) கொழுநனைக் காணும் பொருட்டு (நமது தெருவழியே பலருங்காண) வந்திடுவாளே. (அப்பொழுது என்னிலை யாவதாகும்?) யான் யாவராலும் மிகவும் இரங்கத்தக்கவளே ஆயினேன்.

கள்ளின் - கள்ளினோடும்; கள்ளொடும் என உருபும் உம்மையும் விரிக்க. ஆர்த்திய - உண்பிக்க ('செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்). நுங்கொடு - உம்மை விரிக்க. 'பெயரும்' என்பதற்குச் 'சாணுர்' என்னும் எழுவாய் வருவிக்க. ஆதியருமன் - 'சிறுகுடி' யென்னும் மூதூரிலே இருந்த ஒரு பெரும் பிரபு. இவன் வந்தவர்க்கு வரையாது சோறு அளிப்பவன். இவனை நக்கீரர் நற்றிணையில் 'மூதிலருமன் பேரிசைச் சிறுகுடி' (367) என்று சிறப்பித்துக் கூறியுள்ளார், இவன் தந்தை 'ஆதி'என்பதைக்குறித்துப்போலும் இவன் 'ஆதியருமன்' என்னும் பெயர்பெற்றது. பகைத்தழை - ஆம்பல் மலருக்கு மாறான, வேறான தழை; ஒன்றற்கொன்று மாறுகிய தழை, என்றுமாம்: 'நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையார்', 'செயலையம் பகைத்தழை' என்பன ஐங்குறுநூறு. (187, 211). திதி-துத்தி, தேமல். சேயிழை - சேயிழையாள். அந்தில்-அசை.

உள்ளுறை: —பனங்கள்ளோடு நுங்கையுங் கேளிருக்கு ஆர்த்தும் மூதூரன்ன பரத்தை என்றமையால், அவளும் தன்னையுற்ற காமுகர்க்கு மதியை மயக்குங் காமவின்பத்தையும், இந்திரியங்களை மகிழ்விக்கும் ஆடல்பாடல்களின் இன்பத்தையும் ஊட்டுவிப்பவள் என்றதாம்.

சாணுர், ஆர்த்திய, கள்ளின் நுங்கொடு உள்ளூர்ப் பெயரும் மூதூரன்ன சேயிழை, அலைப்பக் கொழுநர்க் காணிய வருமே, என்று கொண்டுகூட்டி முடிக்க.

அஞ்சில் ஆந்தையார்] 294 [நெய்தல்

பகற்குறியிடத்து வந்து சிறைப்புறத்தானுன தலைமகன் உணருமாறு தலைமகள்தான் இற்செறிப்புற்றதைத்தோழிக்கு அறிவுறுத்தியது.

கடலுட னாடியும், கான லல்கியும்,
தொடலை யாயமொடு தழூவணி யயர்ந்தும்
நொதுமலர் போலக் கதுமென வந்து
முயங்கினன் செலினே; அலர்ந்தன்று மன்னே
தித்தி பரந்த பணையெழின் மென்றோள்
திருந்திழை துயல்வுக்கோட் டசைத்த பசுந்
தழையினும்; உழையிற் போகான் [தழைத்
தான்தந் தனன்யாய் காத்தோம் பல்லே.

(உரை). அயலானொருவனைப்போல வந்து எனது தோழிமாராகிய விளையாட்டுமகளிர் கூட்டத்துடன் கடலினடியும், கானலிடத்துத் தங்கியும், குரவைக்கூத்தாடியும்இருந்துபின்பு, சடிதியில் என்னுடன் முயங்கிவிட்டு அவன் போயிருந்தானேயானல் நமக்கு யாதொரு தீங்கும் துயரமும் நேர்ந்திரா? (அவ்வாறன்றி அடிக்கடி நாமிருந்த புனத்திடத்து வந்து) நம்மை விட்டகலாது காலந்தாழ்த்து இருந்தமையால், தேமல் பரந்ததும் மூங்கிலினழகைக் கொண்டதுமான எனது மெல்லிய தோளிலும், திருந்திய அணிகலன்கள் அசைந்து தொங்குதலைக்கொண்ட முலையிடத்தும் அவன் அணிந்த பசிய கரும்புத்தழையினும் அதிகமாக அலர் அலர்வதாயிற்று. அதனல் இப்பொழுது எனக்குச் சேர்ந்த இற்

செறிவையும் அன்னை காத்தோம்பலையும் அவனே எனக்குத் தந்திட்டான்.

தொடலை - மகளிர் விளையாட்டு ;'தொடலையுந் தகுனமும் மகளிர் விளையாட்டே' என்பது பிங்கலந்தை. தழுவணி - அழகிய குரவைக்கூத்து: தழூஉ - குரவை.'செலினே' என்ற வினையெச்சத்துக்குத்'தீங்கின்றாகும்'என்றொருவினைமுற்று வருவித்துரைக்க. அலர்ந்தன்று - அலர் அலர்ந்தது, உண்டாயிற்று, என்று எழுவாய் வருவிக்க. தோள்-தோளினும். கோட்டு - கோட்டினும்: கோடு - யானையின் தந்தம், அல்லது மலைச்சிகரம் போன்ற தனங்கள் (உவமையாகுபெயர்). தழை - கரும்பு. தழையினும்- தழையைக்காட்டிலும் அதிகமாக; 'தழையினும் அலர்ந்தன்று' என்றிணைக்க. உழை- பக்கம், அருகு. யாய் - செவிலித்தாய். காத்தோம்பல் - வெளியே போகவொட்டாமல் வீட்டினகத்தே காவல்செய்து வைத்தல்.

தூங்கல் ஓரியார்] 295 [மருதம்

பரத்தையிற்பிரிந்து மீண்டு தன்னை வாயில்வேண்டிய தலைவனுக்குத் தோழி சொல்லியது.

உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயும்
தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு நின்றாய் நீயே; இஃதோ
ஓரா வல்சிச் சீரில் வாழ்க்கைப்
பெருநலக் குறுமகன் வந்தென
இனிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே.

(உரை). உடுக்கவேண்டியவைகளை உடுத்தும், கட்டவேண்டியவைகளைக் கட்டியும், பூணவேண்டியவைகளைப் பூண்டும், செருக வேண்டியவைகளைச் செருகியும் தழையாலாகிய உடையாற்பொலிந்த பரத்தையரினத்துடன் சேர்ந்து நீயோ புனலாட்டு முதலாகிய விழாவயர்ச்சியை விரும்பி அவருடன் அங்கேயே தங்கிவிட்டாய்; இதனை உணராது இவ்வூராரோ, பெருநலத்துடன்கூடிய சிறுமகன் பிறந்தனனாக இனி நமது இல்வாழ்க்கை உணவின் சிறப்போடுகூடிய விழாவை உடைத்தாகும் என்று சொல்லாநிற்பர்.

உடைமுதலியவற்றை உடுத்தலும், அணிகளில் மேகலை முதலியவற்றைக் கட்டிக்கொள்ளுதலும், ஆரம், மாலை முதலியவற்றைப் பூணலும், மோதிரம் முதலியவற்றைச் செருகலுமாகிய தொழில்வேறுபாடு தோன்ற 'உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயும்' என்றாள். தழையணி - மலர்களையுந் தழைகளையுஞ் சேர்த்துப்பின்னியதோ, உடைவிசேடம். 'விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்', 'தழையணி யல்குற் செல்வத் தங்கையர்', (அகம், 70, 320). 'இஃதோ' - ஓ, அசை. ஓரா - ஓராது (ஈறுகெட்ட வினையெச்சம்) என்னும் என்ற வினைமுற்றைக் கொண்டுமுடிந்தது. 'வல்சிச்சீர் இல்வாழ்க்கை' எனப் பிரித்துக்கூட்டிக் கொள்க.

'இஃதோ' என்பதை 'இஃதோ செல்வன்' (அகம், 26) என்ற விடத்துப்போல 'இந்த' என்பதின் திரிபாகவும், 'பெருநலக் குறுமகன்' என்றது தலைமகனை எனவுங் கொண்டு இப்பகுதியை முன்னிலைப் புறமொழியாக்கி, 'நீ பரத்தையினின்று மீண்டனையாக, இனி இவ்வில்வாழ்க்கை விழவாயிற்று என்று சொல்லும் இவ்வூர்' என்று பொருள் கோடலும் ஒன்று.

பெரும்பாக்கனார்] 296 [நெய்தல்

நெடிது பரத்தையிற் பிரிந்து தலைவன் மீளானாக ஆற்றாளாய் மிகவும்வருந்திய தலைவி தன்தோழியை நோக்கி 'நீ அவரைக்காணின் கடுமொழி கூறிக் கடிந்திடாது, இவ்வாறொழுகல் தகுமோ, என்று நயமொழி கூறி மீள்விப்பாய்' என்று சொல்லியது.

அம்ம, வாழி தோழி, புன்னை
அலங்குசினை யிருந்த அஞ்சிறை நாரை
அறுகழிச் சிறுமீன் முனையிற் செறுவிற்
கண்ணாறு நெய்தல் கதிரொடு நயக்குந்
தண்ணந் துறைவற் காணின் முன்னின்று
கடிய கழறல் ஓம்புமதி, தொடியோள்
இன்ன ளாகத் துறத்தல்
நும்மிற் றகுமோ என்றனை துணிந்தே.

(உரை). தோழீ, நான் சொல்வதைக் கேட்பாயாக:—புன்னைமரத்தின் அசையுங் கிளையிலிருந்த அழகிய சிறகையுடைய நாரை நீரற்ற கழியிலுள்ள சிறு மீன்களை வெறுத்திட்டால் வயலிடத்துள்ள தேன்மணம் கமழும் நெய்தல் மலருடன் நெற்கதிரை விரும்பும் குளிர்ந்த கடற்றுறைவனை தலைமகனை நீ கண்டால், 'தொடியை யணிந்த உங்காதலி உமது நெடும்பிரிவால் இவ்வாறு புலம்புற்று வருந்தி அழியுமாறு அவளைத் துணிந்து துறத்தல் உமக்குத்தகுமோ?' என்று நயந்த சொல்லினையாகி, முன்னின்று கடுமையான மொழிகளைக்கூறி இடித்துரைத்தலைத் தவிர்வாயாக.

அறுகழி - நீரற்ற கழி. முனையின் - வெறுத்தால். கழறல் ஓம்புமதி - கழறலைத்தவிர்; மதி-முன்னிலையசை. நும்மின் - நும்மினுக்கு, நுமக்கு. என்றனை - முற்றெச்சம். 'துணிந்து' என்பதைக் கீழே 'துறத்தல்' என்பதனோடு கூட்டுக.

உள்ளுறை.—புன்னையிடத்திருந்த நாரை தனக்குரிய நெய்தனிலக் கழியிலுள்ள உணவாகிய சிறுமீனை வெறுத்து அயலாகிய மருதநிலத்து வயல்களிலுள்ள நெய்தலையும் நெற்கதிரையும் விரும்புவதைப்போலத் தலைமகனும் இற்கண்ணிருந்து தனக்குரிய காதலியின் நலத்தை வெறுத்துத் தனக்கேலாத சேரிப்பரத்தையர் நலத்தை விரும்பிச் சென்றதும் இயல்பே என்று நொந்து கூறியதாம்.

இது, காணும்பொழுதிற் காணப்பொழுது பெரிதாகலான் ஆற்றாளாகிய தலைமகள் தன் தோழிக்கு உரைப்பாள் போன்று சிறைப்புறத்தானாய் வந்துநின்ற தலைமகனுக்கு உணர்த்தியதுமாம்.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் } 297 { குறிஞ்சி

வரைவொடு வந்த தலைமகனைத் தமர் வரைவெதிர்ந்ததைத் தோழி தலைமகளுக்கு உணர்த்தியது.

அவ்விளிம் புரீஇய கொடுஞ்சிலை மறவர்
வைவாய் வாளி விறற்பகை பேணார்
மாறுநின் றிறந்த ஆறுசெல் வம்பலர்
உவலிடு பதுக்கை யூரிற் றோன்றும்
கல்லுயர் நனந்தலை நல்ல கூறிப்
புணர்ந்துடன் போதல் பொருளென
உணர்ந்தேன் மன்ற,அவர் உணரா வூங்கே.

(உரை). அழகிய அம்பின் விளிம்பு உராய்ந்த வளைந்த வில்லையுடைய மறவரின் கூர்மைவாய்ந்த அம்பின் வலிய பகைமையை மதியாதவராய் அவருடன் எதிர்த்துநின்று கொலையுண்டிறந்த வழிப்போவாராகிய புதியோரின் பிணத்தை மூடுவதற்காக மேலிட்ட தழைக்குவியல்கள், தூரத்தேயிருந்து பார்ப்பவருக்கு (குடியிருப்புக் குரம்பைகளையுடையதோர்) ஊரெனத்தோன்றும் குன்றுகள் ஓங்கிய விசாலமான கானைக்கடந்து காதலனுடன் கூடி இனிய பேச்சுகளைப் பேசிக்கொண்டு (நாணமும் அச்சமுமின்றி) நீ போதல் சீக்கிரத்தில் நேருமென்பதை, திண்ணமாக, அவன் அறியாமலிருக்கவும் அவனுக்கு முந்தியோான் அறிந்தேன். (இதனை நீ அறிவாயாக).

அவ்விளிம்பு - அம் விளிம்பு. உரீஇய - உராய்ந்த; உராஞ்சிய. கொடுஞ்சிலை - 'கொடியவில்', என்றுமாம். வை - கூர்மை. விறல்-வலிமை. உவலிடுபதுக்கை-கீழே 77-ம் பாட்டின் உரைக்குறிப்பைப் பார்க்க. நல்லகூறிப் புணர்ந்துடன் போதல் -மணமான பிறகு கணவனுடன் கூடிச்செல்லுதல். பொருள் - நிகழும் பொருள், நேரும் நிகழ்ச்சி. மன்ற - நிச்சயமாக; தெற்றமாக. உணராவூங்கு - உணராமுன்னர்.

இது, தோழி, இனி உடன்போதலே பொருளெனத் தலைமகளுக்குச்சொல்லி அவளை உடன்போக்குக்கு ஒருப்படுத்தியதுமாம்.



பரணர்] 298 [குறிஞ்சி

தன்னைக் குறையிரந்த தலைமகனுக்குக் குறைநேர்ந்த தோழி தலைமகளைக் குறைநயப்பித்தது.

சேரி சேர மெல்ல வந்துவந்
தரிது வாய்விட் டினிது கூறி
வைக றோறும் நிறம்பெயர்ந் துறையும்
வன்மைத னோக்கம் நினையாய் தோழி ;
இன்கடுங் கள்ளின் அகுதை தந்தை
வண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசில் மானப்
பிறிதொன் றுகுறித்தவ னெடும்புற நிலையே.

(உரை). தோழீ, அவன் நமது சேரியினருகே மெல்ல நண்ணி, அடிக்கடிவந்து அரிதாக வாயைத்திறந்து இனிய சொற்களைச் சொல்லிவிட்டுச் சென்று நாளுக்குநாள் தனது முகத்தின் சோபை குன்றி (அரிதின்) உறையும் உறுதிப் பாட்டின் நோக்கம் இன்னதென்று நீ உணர்ந்திலைபோலும். (பரிசிலருக்குத்) தந்தைபோன்ற 'அகுதை' என்னும் வள்ளலின் வள்ளன்மை பொருந்திய வாயிலின்முன், சிறுகோலைக் கையிலுடைய புகழ்ந்துபாடுமகளிர் இனிய கடுமையான கள்ளுடன் இளமைவாய்ந்த பெண்யானைகளைப் பரிசிலாகப்பெற விரும்பி நிற்றலைப் போல, அவன் நமது தினைப்புனத்தின் புறத்தே வந்து நிற்பதும் வேறோர் அரும்பேற்றைக் கருதியதேயாம்.

வன்மை - மனத்திட்பம், மனவுறுதி, ஊக்கம். வண்கடை வண்மை - வள்ளன்மை, ஈகை. சிறுகோல் - அகவுனர் பாடுவதற்குத் துணைக்கருவியான 'கிணை' யென்னும் உடுக்கையை இசைக்குஞ் சிறுகோல்;'நுண்கோற்றகைத்த தெண்கண் மாக்கிணை' (புறம்,70), 'வரிகோற் றெண்கிணை, இன்குரலகவுநர்' (அகம், 249), 'நுண்கோலகவுநர்' (அகம், 208) என்று வருமாற்றான் இஃதறியலாகும். 'பிறிதொன்று' என்றது தலைமகளின் நட்பை. குறித்து - குறிப்பினையுடையது; வினைமுற்று. புறநிலை - புறத்தே வந்து நிற்றல்.

செம்பொற் சிலம்பிற் செறிந்த குறங்கின்
அங்கலுழ் மாமை அஃதை, தந்தை
அண்ணல் யானை அடுபோர்ச் சோழர் -(9?)

என்ற அகப்பாட்டிற் குறித்த பெண்பாலாகிய 'அகுதை, யின் இங்குக்கூறிய அகுதை வேறென்பது, 'இன்கடுங் கள்ளின் அகுதை' என்ற விசேடணத்தால் தெளியலாகும். இவ்வகுதையே அகப்பாட்டினும் புறப்பாட்டினும் பெருங்கொடையாளி என்றும், சிறந்த போர்வீரனென்றும் புகழப்பட்டவன்.

இன்கடுங் கள்ளின் அஃதை களிற்றொடு
நன்கல னீயும் நாண்மகி ழிருக்கை —(அகம்-76)
புன்றலை மடப்பிடி அகவுநர் பெருமகன்
மாவீச வண்மகி ழஃதை. —(ஷை 43)
பாவடி யானை பரிசிலர்க் கருகாச்
சீர்கெழு நோன்றா ளகுதை —(புறம் 233)
மணநா றுமார்பின் மறப்போ ரகுதை —(ஷை 347

இப்பெயர் 'அகுதை'யென்றும், 'அஃதை'யென்றும் வழங்கும். அகவல் மகளிர்-அகவுநர், அழைத்துப் புகழ்ந்துபாடுவோர்.

'இன்கடுங் களிற்றி னகுதை' 'வெண்கடைச் சிறுகோல்' என்பன பாடபேதம்.

வெண்மணிப்பூதியார்] 299 [நெய்தல்

சிறைப்புறத்தானான தலைவன் வரைவையறிந்து அவன் உணருமாறு தலைமகள் தோழிக்குத் தன் காதலை எடுத்துச் சொல்லியது.

இதுமற் றெவனோ, தோழி, கானல்
இணர்வீழ் புன்னை யெக்கர் நீழற்
புணர்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கற்
கண்டன மன்னெங் கண்ணே; அவன்சொற்
கேட்டன மன்னெஞ் செவியே; மற்றவன்
மணப்பின் மாணல மெய்தித்
தணப்பின் ஞெகிழ்ப தடமென் றோளே.

(உரை). தோழீ, கானலிடத்துப் புன்னையின் பூங்கொத்துக்கள் உதிர்ந்துகிடக்கும் மணற்குவியலாகிய நிழலையுடைய குறியிடத்து நாம்கூடிய அந்நாள் நெய்தனிலத் தலைவனான காதலனை என் கண்கள் கண்டன; அன்று அவன் மொழிந்த சொற்களை என் செவிகள் கேட்டன; அவன் என்னைத் தழுவிக் கூடுங்கால் சிறந்த அழகைப் பெற்றுப் பிரியுங்கால் மெலிந்து வாடுவனவாகும் எனது பருத்த மெல்லிய தோள்கள். (இதற்குக் காரணம் யாதோ, யான் அறிகிலேன்.)

புணர்குறி - புணர்தற்குரிய குறியிடம் என்றுமாம். 'மன்' இரண்டும் அசைநிலை; அவனைக் காண்டலும் அவன் சொல்லைக் கேட்டலும் இப்பொழுது இலவாயினவே என்று 'கழிவை'க் குறித்து நின்றதாகக் கொள்ளினும் அமையும்.

சிறைக்குடி ஆந்தையார்] 300 [குறிஞ்சி

இயற்கைக்கூட்டத்தின் இறுதிக்கண் தலைமகன் பிரியலுற்றதைக் குறித்துக் கவன்று கலங்கிநின்ற தலைமகளுக்கு, 'நான் இனி உன்னைவிட்டு ஒருகாலும் பிரியேன்; பிரியின் உயிர் தரியேன்;நீ அஞ்சாதேகொள்' என்று சொல்லி அவள் கொண்ட ஐயத்தைத் தீர்த்துத் தலைமகன் வற்புறுத்தியது.

குவளை நாறுங் குவையிருங் கூந்தல்
ஆம்பல் நாறுந் தேம்பொதி துவர்வாய்,
குண்டுநீர்த் தாமரைக் கொங்கி னன்ன
நுண்பஃ றுத்தி மாஅ யோயே ;
நீயே,
அஞ்ச லென்றவென் சொல்லஞ் சலையே ;
யானே,
குறுங்கா லன்னம் குவவுமணற் சேக்குங்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூ ழிலனால் நின்னுடை நட்பே.

(உரை). குவளைமலரைச் சூடிய திரண்ட கரிய கூந்தலையும், செவ்வாம்பல்மலரையொத்த தேன்பொதிந்த செவ்வாயையும், ஆழமான நீர்நிலையிலுள்ள தாமரைமலரின் தாதைப்போன்ற நுண்ணிய பல தேமல்களையும் உடைய மாநிறத்தோளே; நீயே, 'அஞ்சாதி' என்று நான் சொல்லுஞ் சொல்லைத் தெளிந்து அஞ்சாதிரு. நானோ, குறுகிய காலையுடைய அன்னப்பறவைகள் மணற்குவியல்களினிடத்துத் தங்குங் கானற்பரப்போடுகூடிய கடலாற் சூழப்பட்ட இத்தப் பார்வட்டம் முழுவதையும் பெறுவேனாயினும், அதற்காக உன்னுடைய நட்பை விடுதலை நான் ஒருபோதுங் கருதேன்.

குவளை நாறும் - குவளைமலர்கள் சூடப்பெற்றுத் தோன்றும். ஆம்பல் நாறும் - ஆம்பல்போன்ற; 'நாறும்' என்பது உவமவாசகம். குண்டு - ஆழம். கொங்கு - மகரந்தம், பூந்தாது. பஃறுத்தி - பல்துத்தி ; பஃறுளியாறு, பஃறிரைப் பவ்வம்; பஃறலைப்பார்தன் என்று வருதல் நோக்குக. துத்தி

நித்தி, தேமல், திதலை. மாயோள்-கருநிறத்தவள்; மாமைநிறத்தவள். சொல்-சொல்லால். அஞ்சலையே-அஞ்சல், அஞ்சாதே, (அல்லீற்றுஎதிர்மறை வியங்கோள்); ஐ, எ, இரண்டும் அசை. மண்டிலம்-மண்டலம், வட்டம், வட்டமாகிய பூமி; a sphere ar globe. சூழ்-(முதனிலைத் தொழிற்பெயர்) சூழ்தல், நினைத்தல், கருதல். 'சூழிலனுன்' என்றும் ஒருபாடம்; யானே என்று இதே எழுவாய் இருத்தலின் இது சிறவாமை காண்க.

---

குன்றியனார்] 301 [குறிஞ்சி

*வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன் வரவுதாழ்ப்ப ஆற்றுளாகிய தலைமகள் தனதாற்றாமையைத் தோழிக்கு உணர்த்தியது.*

முழுமுத லரைய தடவுநிலைப் பெண்ணைக்
கொழுமட லிழைத்த சிறுபொற் குடம்பைக்
கருங்கா லன்றில் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெடை யகவும் பானாட் கங்குல்
மன்றம் போழு மினமணி நெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்
செவிமுத லிசைக்கும் அரவமொடு
துயின்மறந் தனவால், தோழி, என் கண்ணே.

(உரை). முழவைப்போலத் திரண்ட அடிப்பக்கத்தையும் பெரிய நிலையினையும் உடைய பனைமரத்தினிடத்துக் கொழுத்த மடல்களாலிழைத்த அழகிய கூட்டிலிருந்து கரிய காலையுடைய அன்றிற்சேவலும் அழகிய முதற்சூலின் வருத்தத்தையுற்ற பேடும் கூவிக் குலாவும் நடுராத்திரியில், ஊர்நடுவே ஒலிக்கும் மணியின் வரிசையையுடைய நெடிய (காதலர்தம்) தேர் வரவில்லையாயினும், வருவது போல எனது செவியகத்து ஒலிக்குஞ் சத்தத்தால் எனது கண்கள் துயிலொழிந்தன, தோழீ.

முழ-முழா; ஈற்றுகாரங் குறுகி நின்றது. பொற்குடம்பை: பொன் - அழகு. அன்றில் - அன்றிலும், அன்றிற் சேவலும். வயவு-வயா; கருத்தரித்தலால் உண்டாகிய வருத்தம். பெடை - பெடையும். பானாள் - நாள் பால்; பர்திராத்திரி; பால் - பாதி. மன்றம் - ஊர்நடு; நெடுந்தெருவுமாம். செவிமுதல் - செவியில்; 'முதல்', ஏழாம்வேற்றுமை உருபு. அரவம் - ஒலி. அரவமொடு - அரவத்தால்.

இறைச்சி:—'குடம்பை...அகவும் பானாட்கங்குல்' என்றமையால், சேவலும் பேடுங் கூடிக் குடம்பையிலிருந்து மகிழ்ந்துறையும் அன்றில்களின் அகவுதலைக் கேட்டுத் தலைமகள், தலைமகன் தன்னை முறைப்படி மணந்து இல்லகத்து இன்புற்றிருக்கப் பெற்றிலமே என்று வருந்தினள் என்க.

'அன்றிற்காமர்......பெடையகவும்' என்ற பாடத்துக்கு, அன்றிலை (சேவலை) பெடை கூவியழைக்கும், என்று பொருள் கொண்டு, அப்பேட்டின் நிலையைத் தன்னிலை ஒத்திருக்கக் கண்டு அவள் வருந்தியதாகவும், இறைச்சியின் வினைக்கேற்பத் தானுங் கடுஞ்சூல் வயாவினளாக இருந்ததாகவும், தலைமகனது பிரிவு களவுக்காலத்து வரைவிடைப் பிரிவன்றிக் கற்புக்காலத்துப் பிரிவாகவுங் கொள்க.

---

மாங்குடிகிழார்] 302 [குறிஞ்சி

*தலைமகன் வரைந்துகொள்ளாது ஒருவழித் தணந்திருந்தகாலத்து ஆற்றாது வருந்திய தலைமகள் தன்னை ஆற்றுவிக்குந் தோழிக்குச் சொல்லியது.*

உரைத்திசின், தோழி; அது புரைத்தோ வன்றே;
அருந்துய ருழத்தலும் ஆற்றும் அதன்றலை;
பெரும்பிறி தாதல் அதனினு மஞ்சுதும்;
அன்னோ! இன்னும் நன்மலை நாடன்
'பிரியா நண்பின ரிருவரும்' என்னும்
அலரதற் கஞ்சினன் கொல்லோ, பலருடன்
துஞ்சூர் யாமத் தானுமென்
நெஞ்சத் தல்லது வரவறி யானே.

(உரை). இனி இக்களவொழுக்கமோ மேன்மை உடையதொன்று அன்று; அதனினும், பிரிவாலுற்ற அருந்துயரத்தையும் நாம் பொறுக்கமாட்டாம்; அதைக் காட்டிலும் இறந்துபடுதலை அஞ்சுகின்றும். அந்தோ, இவற்றுக்கெல்லாம் மேலாக, நன்மலை நாடனாகிய தலைமகன் 'இவ்விருவரும் பிரியாத நண்பினராயினர்' என்று பலருங் கூறும் பழிமொழியை அஞ்சினன் கொல்லோ; (அன்றிக் காரணம் வேறு யாதோ அறியேன்,) ஊரிலுள்ளார் பலரும் ஒருங்கே துயிலும் நடுநிசியிலும், என்னுள்ளத்தல்லது, கண்ணுக்குப் புலப்பட வந்திலன். (நான் செயற்பால தென் ?) உரையாய் தோழி.

அது புரைத்தோ அன்று - அதுவோ புரைத்தன்று, என்று ஒகாரத்தைப் பிரித்துக்கூட்டுக. பெரும்பிறிது-இறத்தல், சாதல். அன்னோ - அந்தோ. துஞ்சூர் யாமம் - ஊர் துஞ்சு யாமம். யாமம் - நடுராத்திரி. யாமத்தானும் - யாமத்திலும்; 'இன்' சாரியையினிடத்தில் 'ஆன்' சாரியை வந்தது.

---

அம்மூவனார் 303 [நெய்தல்

*தலைமகனுக்குத் தோழி தலைமகளின் இற்செறிப்பை அறிவுறுத்தி வரைவுகடாயது.*

கழிதேர்ந் தசைஇய கருங்கால் வெண்குருகு
கடைகரைத் தாழைக் குழீஇப் பெருங்கடல்
உடைகரை யொலியிற் றுஞ்சுந் துறைவர்,
தொன்னிலை நெகிழ்ந்த வளையள், ஈங்குப்
பசந்தனள் மன்னெந் தோழி, என்னொடு
மின்னிணர் புன்னையம் புகர்நிழற்
பொன்வரி யலவ னாட்டிய ஞான்றே.

(உரை). கழியினிடத்து (மீனைத்தேடி) வருந்திய கரிய-காலையுடைய வெள்ளைநாரைகள் கரையின் பக்கத்திலுள்ள தாழைச்செடியிடத்துக் கூடியிருந்து பெரிய கடலின் அலைகள் கரையில் வந்து மோதி யுடையும் சத்தத்தினிடையே துயிலும் கடற்சேர்ப்ப, எனது தோழியாகிய தலைமகள் உடுக்களைப்போன்ற பூங்கொத்துக்களையுடைய புன்னை மரத்தின் அழகிய நிழலின்கீழ் என்னுடனிருந்து பொன்னிறமான வரிகளையுடைய நெண்டைப்பிடித்து ஆட்டி விளையாடிய அந்நாளிலிருந்த பழையநிலைமையின் நீங்கி, இப்பொழுது நழுவிய வளையினளாய் மேனி மிகவும் பசந்தனள். (இதனை நீ அறிந்து பரிகரித்திடுவாயாக.)

அசைஇய-இளைத்த, மெலிவுற்று வருந்திய. துறைவர் (விளி) துறைவரே. தொன்னிலை - தொன்னிலையின், தொன்னிலையினின்று மாறுபட்டு. ஈங்கு- இங்கு இடத்தைக் குறிக்காது, இப்பொழுது, என்று காலத்தைக் குறித்து வந்தது. மின் -(விகாரம்) மீன், நட்சத்திரம்; ஒளியுமாம். புகர்- அழகு. (சிலப்பதிகாரம், 9, 10, அடியார்க்குநல்லாருரை) அலவனைப் பிடித்து ஆட்டுதல் நெய்தனிலச் சிறுமகளிர்தம் விளையாட்டு :

திணிமணலடைகரை அலவனாட்டி
அசைஇனை விருந்த ஆய்தொடிக் குறுமகள்-(அகம், 280)
இலங்குவளை தெளிர்ப்ப அலவ னாட்டி
முகம்புதைகதுப்பினள் இறைஞ்சி நின்றோளே (ஐங்குறு, 197)

உள்ளுறை:—அந்த வெண்குருகைப்போலத் தலைமகனும், தன்னைத்தேடியுற்று நலனை அரிதிற் பெற்றுண்டு, அதனால் ஊரெங்குமெழுந்த அலரை அஞ்சாது தன் மனையிலே தங்கிவிட்டான் என்பதாம்.

---

கணக்காயன் தத்தனார்] 304 [நெய்தல்

*பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.*



கொல்வினைப் பொலிந்த கூர்வா யெறியுளி
முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்
தாங்கரு நீர்ச்சுரித் தெறிந்து வாங்குவிசைக்
கொடுந்திமிற் பரதவர் கோட்டுமீ னெறிய
நெடுங்கரை யிருந்த குறுங்கா லன்னத்து
வெண்டோ டிரியும் வீததை கானற்
கைதையந் தண்புனற் சேர்ப்பனொடு
செய்தனம் மன்றவோர் பகைதரு நட்பே.

(உரை). கொல்லன்தொழிலால் பொலிவுற்ற கூர்மையான முனையையுடைய உளியின் தலையைச் செருகும்படி அமைந்த உலர்ந்து முதிர்ந்த மூங்கிலாலான வலிபொருந்திய காம்பையுடைய ஈட்டியைத் தாங்கரிய தன்மைத்தான வலத்தோடு நீர்சுழிக்கும்படி எறிந்து விசையுடன் வாங்கிய வளைந்தபடகையுடைய பரதவர் சுறுமீனைப் பிடித்து எறிந்ததால் நீண்ட கரையிலிருந்த குறுகிய காலையுடைய வெண்மையான அன்னப்பறவையின் தொகுதி அஞ்சியோடும் பூநெருங்கிய தாழை நிறைந்த கானலையுடைய கடற்சேர்ப்பனாகிய தலைமகனுடன், நிச்சயமாக, நமக்குத் தீங்கை விளைத்துத் துன்பத்தைத்தரும் நட்பொன்றை நாம் செய்தோம். (இனி அதற்கு நொந்தாவதென்?)

கொல்-கொல்லன்; the blacksmith. எறியுளி...நோன் காழ் - கூர்மையான முனையோடுகூடிய இரும்புத் தலைசெருகப்பட்ட நீண்ட வலிய மூங்கிற் காம்பையுடைய ஈட்டி. வெதிர் - மூங்கில். சுரித்து - சுரிக்க, சுழிக்கும்படி. 'நீர்ச்சுரத் தெறிந்த' என்ற பாடத்துக்குக் 'கழிச்சுரம்' (நற்றிணை, 63) என்ற விடத்துப்போல, 'நீரிடம்' (கடல்) என்று கொள்க. கோட்டுமீன் - நீண்ட கொம்புகளை (எயிறுகளை)யுடைய சுறுமீன். 'கோடு' என்பது, யானை பன்றி சுறுமீன் இவற்றின், மருப்புக்குப் பெயர்; 'சினைச்சுறவின் கோடு நட்டு' என்று பத்துப்பாட்டிலும்(பட்டினப்பாலை, 86), 'மோட்டுமணலடைகரைக் கோட்டுமின் கொண்டி' (10) என்று அகப்பாட்டினும், 'கோட்டுமீனெறிந்த உவகையர்' (49) என்று நற்றிணையிலும் வந்திருத்தல் காண்க. தோடு - தொகுதி, கூட்டம்.

---

குப்பைக்கோழியார்] 305 [குறிஞ்சி

*காப்புமிகுதிக்கண் ஆற்றுளாய தலைமகள் அறத்தொடு நிற்பாளாய்த் தோழிக்குத் தனதாற்றுமை தோன்றச் சொல்லியது.*

கண்டர வந்த காம வொள்ளெரி
என்புற நலியினும் அவரொடு பேணிச்
சென்றுநா முயங்கற் கருங்காட் சியமே;
வந்தஞர் களைதலை அவராற் றலரே;
உய்த்தனர் விடார், பிரித்தனர் களையார்,
குப்பைக் கோழித் தனிப்போர்ப் பொலிவிளி
வாங்கு விளியி னல்லது
களைவோ ரிலையா னுற்ற நோயே.

(உரை). அவரை நான் கண்டமையால் உண்டான காமக் கடுந்தீ எனது என்பைப்பற்றி என்னைக் கொளுத்தி வருத்தினும், அவரிருக்குமிடத்துக்கு விரும்பிச்சென்று அவருடன் முயங்குவமென்றால், அஃதிசையாவண்ணம் அவரைக்காணுதலும் நமக்கும்அரிதாய்விட்டது; தாமிங்கு வந்து நமது துயரத்தைப் போக்குதலை அவருஞ் செய்கிலர். கூடும்படிக் கொடுப்பாரும், கூடாதவண்ணம் தடுப்பாருமின்றித் தாமே வைக்கோற் போரின்கீழ் ஆணும் பெண்ணுமாய்க் கூடிக் களிக்கும் குப்பைக்கோழியின் காமவேட்கை தணியுமாறு தணியினல்லது யானுற்ற காதல்நோயைப் போக்குவார் பிறரெவரையுங் காணேன் நான்.

கண் தரவந்த - கண்பார்வை தந்ததினால் வந்த. போர் - வைக்கோற்போர். பொலி-(ஆகு பெயர்) பொலிவைத்தரும் இணைவிழைச்சு. விளிதல் - ஒழிதல், அழிதல். 'குப்பைக் கோழி......பொலி விளிவாங்கு' என்ற சொற்றொடரின் பொருளும் உவமையின் பொருத்தமும் நன்கு புலப்படவில்லை; மேழேகண்ட பொருள் அத்துணைத் திருப்திகரமாகவில்லை. 'களைவோரிலை' என்றமையால், அன்னை முதலியோர்க்கு அறத்தொடுநின்று உற்றதையுணர்த்தித் தலைமகன் தன்னை வரைந்துகொள்ளுமாறு செய்வாயாக என்று தோழியைத் தலைமகள் வேண்டியவாறும்.

---

அம்மூவனார்] 306 [குறிஞ்சி

*காப்புமிகுதிக்கண் ஆற்றுத் தலைமகள் தன்னுள்ளத்துள்ளதை அடக்கமாட்டாது வாய்சோர்ந்து கூறியது.*

மெல்லிய, இனிய, மேவரு தகுந
இவைமொழி யாமெனச் சொல்லினும் அவைநீ
மறத்தியோ, வாழியென் னெஞ்சே; பலவுடன்
காமர் மாஅத் தாதமர் பூவின்
வண்டுவீழ் பயிருங் கானல்
தண்கடற் சேர்ப்பனைக் கண்ட பின்னே.

(உரை). மெல்லியவும், இனியவும், விரும்பத்தக்கனவுமான சொற்களே அவன்மாட்டுப் பேசத்தக்கனவாகும் என்று (உனக்கு நான்) கூறியிருப்பினும், என்னெஞ்சே, பலபூக்களின் தாதோடு அழகிய மாவினது தாதும் பரந்து படிந்த பூவினிடத்து வண்டுகள் விரும்பிவீழ்ந்து இசைக்குங் கானலையுடைய குளிர்ந்த கடற்சேர்ப்பனைக் கண்டபோது, அவற்றை நீ மறந்திடுவாயோ?

இவை - இவையே. மொழி - மொழியத்தக்கவை. ஆம்- ஆகும். வீழ் - (1) விரும்பும் (2) விழும். பயிரும் - ஒலிக்கும்.

இன்மொழியே கூறவேண்டுமென்று நான் சொல்லியிருப்பினும் நீ மறந்து கடுமொழி கூறுவாயோ? என்றுளாம். 'இவை மொழியாம்' என்பதற்கு, 'இன்மொழிகளை இனிக் கூறும்' என்று நான் சொல்லியிருப்பினும் நீ மறந்து அவற்றையே மொழிவாயோ? என்று கூறினளாகக் கொள்ளினும் அமையும்.

---

கடம்பனூர்ச் சாண்டிலியனார்] 307 [பாலை

*தலைமகனது நெடும்பிரிவிடை, ஆற்றவும் ஆற்றாது வருந்திய தலைமகள் தன்னைக் கடுஞ்சொற்கூறி வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.*

வளையுடைத் தனைய தாகிப் பலர்தொழச்
செவ்வாய் வானத் தையெனத் தோன்றி
இன்னம் பிறந்தன்று பிறையே; அன்னோ
மறந்தனர் கொல்லோ தாமே, களிறுதன்
உயங்குநடை மடப்பிடி வருத்தம் நோனாது
நிலையுயர் யாஅத் தொலையக் குத்தி
வெண்ணார் கொண்டு கைவைத் தண்ணாந்
தழுங்க னெஞ்சமொடு முழங்கும்
அத்த நீளிடை அழப்பிரிந் தோரே.

(உரை). வளையை உடைத்தாற்போன்ற உருவத்தோடு செவ்வானத்தில் பிறைச்சந்திரன் பலருந்தொழ விரைவாகப் பிறந்து தோன்றியது. அந்தோ, ஆண்யானை சோர்ந்தநடையையுடைய தன் இளம்பிடியின் பசிவருத்தத்தைப் பொறாது உயர்ந்த நிலையையுடைய யாமரத்தை அழியும்படி தன் மருப்பாற் குத்தி வெள்ளிய பட்டையை உரித்துத் தன்கையில் வைத்து மேனோக்கி வருந்துமுள்ளத்தோடு முழங்கும் அருஞ்சுரமாகிய நீண்ட இடையிடத்தைக் கடந்து அழும்படி நம்மைவிட்டுப் பிரிந்துசென்ற தலைவர்தாம் இன்னமும் வந்திலர்; நம்மை மறந்திட்டார்போலும்:

ஐயென - ஐதென, விரைவாக. இன்னம் - இன்னமும், இன்னும். 'வந்திலர்' என்று ஒருசொல் வருவித்துக் கொள்க. பிறந்தன்று - பிறந்தது. நோனாது - பொறாது, தாங்கமாட்

டாது. யா.- பாலைநிலத்துஉள்ளதோர் மரம். வெண்ணர் - வெள்ளிய நார், மரப்பட்டை. அத்தம் - அருஞ்சுரம்.

'யா அத்துலைய' (தூரத்திலுள்ள யாமரம்), 'கைசுவைத்து' (கையில் வைத்துச் சுவைத்துப் பார்த்து) என்பன பாடாந்தரம்.

இப்பாட்டு இக்குறுந்தொகைப் பாட்டுக்களுக்குப் பேரெல்லையாக வரையறுத்த எட்டடியினும் ஓரடி மிகுந்திருத்தல் கவனிக்க.

---

பெருந்தோட் குறுஞ்சாத்தனர்] 308 [குறிஞ்சி

வரையாது தலைமகன் தன்னைக் களவிற் கூடிச்செல்லும் தீயவொழுக்கம் வெளிப்பட்டு அலரானதைக் குறித்து அழுங்கிய தலைமகளைத் தோழி வற்புறுத்தித் தேற்றியது.

சோலை வாழை சுரித்துகும் பிணிய
அணங்குடை யிருந்தலை நீவலின் மதனழிந்து
மயங்குதுய ருற்ற மையல் வேழம்
உயங்குயிர் மடப்பிடி உலைபுறந் தைவர
ஆமிழி சிலம்பின் அரிதுகண் படுக்கும்
மாமலை நாடன் கேண்மை
காமந் தருவதோர் கைதாழ்ந் தன்றே.

(உரை). தனது குருதியொழுகுவதும் நோதலைச் செய்வதுமாகிய புண்ணையுடைய பெரியதலையில் சோலையினுள்ள வாழையின் தாறுகள் உராய்ந்ததால் செருக்கழிந்து மயக்கத்தோடு கூடிய துயரத்தையுற்ற மதவேழம் தனது வருந்துமுயிர்ப்பினையுடைய பிடி சோவால் உலைவுற்ற தனதுடலைத் தடவ, அருவிகளிழியும் மலைமுழைஞ்சில் அறிதாகத் துயில்கொள்ளும் பெரியமலைநாடன் நட்புக் காமவின்பத்தை அளிக்கத்தக்க ஒழுக்கத்தினின்று தவறியதொன்று அன்று.

சுரித்துகும் - (இரத்தம்) சுழித்தொழுகும். பிணிய அணங்கு -துன்பத்தைத்தரும் நோய்போன்ற புண். 'பிணி' 'அணங்கு' - (இரண்டும் ஆகுபெயர்) பிணியின் காரியமாகிய துன்பம், நோய்போன்ற புண். நீவல் - தொடுதல், படுதல். மதன் செருக்கு. மையல் - மதமயக்கம். உயிர் - உயிர்ப்பு, மூச்சு விடுதல். தைவர-தடவ. ஆம் - நீர், நீரருவி. கை - ஒழுக்கம். தாழ்ந்தன்று - (விகாரம்) தாழ்ந்தது அன்று.

உள்ளுறை:—வேடனம்பாலான புண்ணில் வாழையின் குலை தாக்க மிக்க வருத்தத்தையுற்ற வேழம், மலைமுழைஞ்சில் பிடியானை தனதுடலைத் தடவ அரிது கண்படுத்திருப்பதைப்போலத் தலைமகனும் வேடனம்பாலுற்ற வருத்தத்தை ஊரெழுந்த அலர் தாக்கி அதிகப்படுத்தத் தன்னை வரைந்துகொண்டு இல்லினமர்ந்து தனதுலாலனையால் துயரொழிந்து துயிலப்பெற்றிலனே என்று தலைமகள் வருந்திக் கூறியதாம்.

---

# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

## 14&15 சிற்பமும் உருவசாஸ்திரமும்.

[845-வது பக்கத்தொடர்ச்சி]

### (i) சிற்பமும் சைவ முறையும்

திருநாவுக்கரசு நாயனர் வேளாளகுலத் திலகராய்ப் பூமிப்பரிட்சை நன்குணர்ந்தவரென்பதைக் காட்டும் சில தேவார மேற்கோள்களைக் கண்டோ மன்றோ? இனிப் பூமிமேல் பொதுஜனங்கள் வியக்கும் கலையான சிற்பத்தில் அப்பர்மனம் சென்றதோ வென்பதைச் சற்று ஆராய்வோம்:—

சிற்பமென்பது வஸ்து புருட இலக்கணக் கலை மாத்திரமன்று. கட்டவிளக்கம், யந்திரச் சூழ்ச்சி, பல கூறு தொந்தநிலை, உருவ இலக்கணம் முதலியனவும் சிற்பத்தினுள் அடங்கும். எனவே ஓவியமும் விக்கிரகநிலையும் மற்றும் பாதாதிகேசமாய தேக அவயவக் கூறுகளின் இலக்கணமும், அவை மனிதவாழ்க்கையில் விளங்கும் தன்மை முதலியனவும் காட்டும் கலையாம் அது. இக்கலையின் பொருளாய்த் தேவாரத்தில் விளங்குவன திருக்கோயில்களும், அவற்றிலுள்ள சிவபெருமான் திருவுருவமும், உமையவள் நிலையும், கோபுரங்களும் குளங்களும், ஆங்கு வசிப்பனவும் பூப்பனவுமேயாம்.

ஓதிமா மலர்கள் தூவி
யுமையவள் பங்கா மிக்க
சோதியே! துளங்கு மெண்டோள்
சுடர்மழுப் படையி னனே!
ஆதியே! யமரர் கோவே
யணியணு மலையு ளானே
நீதியால் நின்னை யல்லால்
நினையுமா நினைவி லேனே.

திருவண்ணாமலை - திருநேரிசை 1.

என்பர் அப்பர். ஆயினும் சிவபெருமான் திருவுருவத்தைக் கல்லில் செதுக்கிக் காட்டுவதும், எழினியில் சித்திரிப்பதும் பலகை முதலியனவற்றில் ஓவியவிளக்கம் செய்வதும் மனிதனுற் செய்யமுடியாத காரியமென்பது அப்பர் சித்தாந்தமாம். ஏனெனில் மனிதரைப் பார்த்து மனிதவுருவம் எழுதவும் செய்யவும் கூடும். மனித உருவத்தைச் சுத்தஞ்செய்து, சீர்திருத்தித் தேவவுருவமாகவும் காட்டக்கூடும். ஆயினும் முழுமுதற் கடவுளை மனித வுருவிலாகிலும் வேறு எந்த வுருவிலாகிலும் வரைந்து காட்டுவதென்றால் "மெய்யுளே விளக்கையேற்றி வேண்டள வுயரத் தூக்கி, யுய்வதோ ருபாயம்" செய்யும் மேலோர்க்கும் மிகவும் கடினமே.

கோவண முடுத்த வாறுங் கோளர வசைத்த வாறும்
தீவணச் சாம்பல் பூசித் திருவுரு விருந்த வாறும்
பூவணக் கிழவ னரைப் புலியுய ரைய னரை
யேவணச் சிலையி னரை யாவரே யெழுது வாரே.

தனித் திருநேரிசை 3.

கோவணம் உடுத்த மனிதனை ஓவியத்தில் காட்டலாம். அவன் பைத்தியக்காரன்போல் காணப்படுவன். இன்றேல் சந்நியாசிபோலும் காணப்படலாம். உலக அறிவு கெட்ட பித்தனும், பக்தியால் பரமனையே காண விச்சைகொண்ட பித்தனும், பக்தர்க்குப் பித்தனன பெருமான் உருவத்தை விளக்குவது அரிதேயன்றோ? "மன்னுகலை துன்னுபொருள் மறை நான்கும் வான் சரடாய்த் தன்னையே கோவணமாய்ப் பெற்ற" பெருமானை எவ்வாறு எழுதுவது? இத் தன்மையை, அகப்பொருட்டுறையில் அப்பர்



வண்ணமும் வடிவுஞ் சென்று கண்டிலள்
எண்ணு நாமங்க ளேத்தி நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
மண்ண லேயறி வானிவ டன்மையே.

திருக்கழிப்பாலை - திருக்குறுந்தொகை.

என்பர். கோவணம் தரித்தவராயினும் சிவபெருமான் நிருவாணமாய் உடையற்ற ஏழையாய்க் காணப்படுபவ ரல்லர்.

உடையர் கோவண மொன்றுங் குறைவிலார்
படைகொள் பாரிடஞ் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
சடையிற் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்லவர்க் கில்லை யவலமே.

திருப்பைஞ்ஞீலி - திருக்குறுந்தொகை 2.

ஆகையால் உடை குறைவுபோல் காணப்படும் ஒரு உருவம், ஒன்றும் குறைவற்றுக் காட்டல் ஓவியத்தில் மிகவும் அசாத்தியமே. ஆயினும் இத்தொழில் கைகூடுவதற்குத் திருவருட் சிந்தனையே வேண்டும்:—

வெந்த வெண்பொடி பூசும் விகிர்தனர்
கந்த மாலைகள் சூடுங் கருத்தனர்
எந்தை யென்னிடை மருதினி லீசனைச்
சிந்தை யால்நினை வார்வினை தேயுமே.

திருவிடைமருது - திருக்குறுந்தொகை 8.

திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மைசெய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்
துருகி நைபவர்க் கூனமொன் றின்றியே
யருகு நின்றிடு மானைக்கா வண்ணலே.

திருவானைக்கா - திருக்குறுந்தொகை 2.

இவ்வாறு சிந்தனை செய்வது துன்பமான தொழிலன்று.

துன்ப மில்லை துயரில்லை யாமினி
நம்ப னாகிய நன்மணி கண்டனர்
என்பொ னுருறை வேட்கள நன்னகர்
இன்பன் சேவடி யேத்தி யிருப்பதே.

திருவேட்களம்- திருக்குறுந்தொகை 5.

ஆதலால் சிவபெருமானது திருவருட் சிந்தனையில் மூழ்கிமூழ்கி இக்கலையின் நுணுக்கங்களை அறிந்து செவ்வனே ஞானம் விளங்கினற்றான் சிவபெருமான் திருவுருவத்தைக் கல்லிலாயினும் சரி, மரத்திலாயினும் சரி, பளிங்கிலாயினும் சரி, அமைத்துக் காட்டக் கூடுமேயன்றிப்"பொக்கம் பேசிப் பொழுதுகழிப்பின்" கைகூடுவதன்று. பின்னுகன் திருவடியோ எதற்கும் வழிவிடும்:—

அல்ல லில்லை யருவினை தானில்லை
மல்கு வெண்பிறை சூடும ணாளனர்
செல்வ னர்திரு வேட்களங் கைதொழ
வல்ல ராகில் வழியது காண்மினே.

திருவேட்களம்-திருக்குறுந்தொகை.

### (ii) சிற்பமும் சிவபெருமான் திருவுருவமும்

திருநாவுக்கரசு நாயனர் சிவத்தில் மூழ்கி ஆநந்தித்துச் சிவபெருமான் *உருவத்தைப் பற்பல ஞான நிலையில் கண்டு களித்துக் கூத்தாடி, சிற்பிகளும், ஓவியக்கலை வல்லுனரும் ஆய்ந்தறிந்துகாட்டாத் திருவுருவ அருமைகளைத் திருப்பூவணத் திருத்தாண்டகப் பாசுரங்களிற் கற்கண்டு பாகென உருக்கிக் காட்டுகின்றார். அவர் சொல்நயம், பொருள்நயம் வேறொருவர் மொழியாலும் அடையவொண்ணுவாதலால் அப்பதிகத்தை யாவருக்கும் பயன்படுமாறு அடியில் வரையலாகின்றோம்.

திருப்பூவணம்—திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னர்க்கே. 1

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊனாகி யூர்திரிவா னாகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேல்
சேனாக வரைவில்லா லெரித்தல் தோன்றுஞ்
செற்றவர்தம் மெலும்பினாற் செறியச் செய்த
பூணாணு மரைநாணும் பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னர்க்கே. 2

கல்லாலி னீழலிற் கலந்து தோன்றுங்
கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று
சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றுஞ்
சூழரவ மான்மறியுந் தோன்றுந் தோன்றும்,
அல்லாத காலனைமுன் னடர்த்த றோன்றும்
ஐவகையால் நினைவார்பா லமர்ந்து தோன்றும்,
பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னர்க்கே. 3

படைமலிந்த மழுவாளு மானுந் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையி னொலிதோன்றும் நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்றும்
ஊரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னர்க்கே. 4

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்று
மாசிலாப் புன்சடைமேன் மதியந் தோன்று
மியல்பாக விடுபிச்சை யேற்ற றோன்று
மிருங்கடனஞ் சுண்டிருண்ட கண்டந்தோன்றுங்
கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
யாயிரமா முகத்தினொடு வானிற் றோன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னர்க்கே. 5

பாராழி வட்டத்தார் பரவி யிட்ட
பன்மலரு நறும்புகையும் பரந்து தோன்றுஞ்
சீராழித் தாமரையின் மலர்க ளன்ன
திருந்தியமா நிறத்தசே வடிக டோன்றும்
ஓராழித் தேருடைய விலங்கை வேந்தன்
உடல்துணித்த விடர்பாவங் கெடுப்பித் தன்று
போராழி முன்னீந்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னர்க்கே. 6

---

*பொன்றிகழ் கொன்றைமாலை புதுப்புனல் வன்னி மத்த
மின்றிகழ் சடையில் வைத்து மேதகத் தோன்று மென்ற
வன்றவ ரனக்க லாகா வனலெரி யாகி நீண்டார்
இன்றட னுலக மேத்த விடைமரு திடங்கொண் டாரே.

திருவிடைமருது - திருநேரிசை 9.

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றும்
சதுமுகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த ரோன்றும்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்
தூயமா மதியுடனே வைத்த ரோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 7

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றும்
திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த நீர்மை தோன்றும்
நெற்றிமேற் கண்தோன்றும் பெற்றந் தோன்றும்
மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்
மலைமகளுஞ் சலமகளு மலிந்து தோன்றும்
பொறியரவு மிளமதியும் பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 8

அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்றும்
மணிகிளரு முருமென்ன வடர்க்குங் கேழல்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்றும்
மணமலிந்த நடந்தோன்றும் மணியார் வையைத்
திருக்கோட்டி னின்றதோர் திறமுந் தோன்றுஞ்
செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப்
பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 9

ஆங்கணைந்த சண்டிக்கு மருளி யன்று
தன்முடிமே லலர்மாலை யளித்தல் தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பல்பிறவி யறுத்தருளும் பரிசு தோன்றுங்
கோங்கணைந்த கூவிளமு மதமத் தம்முங்
குழற்கணிந்தகொள்கையொடுகோலந்தோன்றும்
பூங்கணைவே ளுருவழித்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே 10

ஆருருவ வுள்குவா ருள்ளத் துள்ளே
யவ்வுருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவுதோன்றும்
நீருருவக் கடலிலங்கை யரக்கர் கோனை
நெறுநெறென வடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

# தமிழ்ப் பாடம் 145.

## இலக்கணம்

[ 672-வது பக்கத் தொடர்ச்சி ]

மெய்யீற்றுப் புணர்ச்சியில் யகர ரகர ழகர மகர வகர மெய்யீறுகள், வருமொழிமுதல் மெய்களோடு எவ்வாறு புணரும் என்பதை இதுவரையில் கூறினோம். இனிக் கூறுவதற்கு ணகர னகர லகர ளகர மெய்யீறுகள் இருக்கின்றன. இவைகளையுந் தனித்தனியே எடுத்துக்கொண்டு வருமொழிமுதலில் இடையின மெல்லின வல்லின மெய்கள் வருங்கால் எவ்வாறு புணரும் என்பதை இனிப் பார்ப்போம். மற்றஈற்றுப் புணர்ச்சிகளுக்கு உரிய விதிகளைப் போன்றே இந்த விதிகளும் வருமொழிமுதலில் என்ன மெய் நிற்கின்ற தென்பதையும், நிலைமொழியும் வருமொழியும் எந்தத் தொடராய் அமைந்திருக்கின்றன என்பதையும் பொருந்தியிருக்கின்றன.

ணகர மெய்.

I நிலைமொழி யிறுதியில் ணகரமெய் + வருமொழி முதலில் இடையின மெய்.

இடையின மெய்கள் ஆறனுள் மொழிக்குமுதலில் வரக்கூடியன யகரம் வகரம் ஆகிய இவை இரண்டே. மற்ற ரகர லகர ழகர ளகரங்கள் தமிழில் மொழிக்கு முதலில் வாரா.

(a) நிலைமொழி யிறுதியில் ணகரமெய்யும் வருமொழி முதலில் யகரமும் வருமாயின், யாதும் விகாரமின்றிப் புணரினும் புணரலாம், அல்லது ஒரு இகரம் தோன்றினும் தோன்றலாம். இது எல்லாத் தொடர்களுக்கும் ஒக்கும்.

மண் + யானை = மண்யானை என விகாரமின்றி இயல்பாயும், அல்லது, மண் + இ + யானை = மண்ணியானை, என இகரம் தோன்றியும் புணரலாம். மண் + இ + யானை = மணியானை என்றாகாமல் மண்ணியானை என்று ஆவதற்கு விதி முன்னரே கூறப்பட்டிருக்கின்றது. நிலைமொழி யீற்றுமெய் தனிக்குறிலைச் சார்ந்திருப்பதால், அது இப்பொழுதுதோன்றிய உயிரோடு சேரும்போது இரண்டாக விரிந்து, ஒன்று உயிரை யேற்க மற்றது அப்படியே நின்றது—இது மண்ணால் செய்த யானை என விரியுமாகையால் மூன்றும்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

கண் + யாது = கண்யாது, அல்லது, கண்ணியாது.

(b) நிலைமொழியின் இறுதியில் ணகரமெய்யும் வருமொழிமுதலில் வகரமெய்யும் வருமாயின் எல்லாத்தொடரிலும் யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்.

விண் + விளங்கியது = விண்விளங்கியது— எழுவாய்த்தொடர்

மண் + வெட்டினன் = மண்வெட்டினன் — இரண்டாம்வேற்றுமைத் தொகை.

புண் + வலி = புண்வலி— ஆறும்வேற்றுமைத் தொகை.

மண் + விளக்கு = மண்விளக்கு — மூன்றும்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

காண் + வேந்தே = காண்வேந்தே—வினைமுற்றுத் தொகை.

உண் + விருந்து = உண்விருந்து—வினைத்தொகை.

மண் + விண் = மண்விண்—உம்மைத் தொகை.



II நிலைமொழியிறுதியில் ணகரமெய் + வருமொழி முதலில் மெல்லின மெய்.

மெல்லின மெய்களில் ங ஞ ந ம என்னு மிந்நான்கு எழுத்துக்களே மொழிமுதல் வரக்கூடும். இவைகளில் ஙகரம், சுட்டு அல்லது வினா எழுத்துக்களுடன் சேர்ந்து அங்ஙனம் இங்ஙனம் எங்ஙனம் யாங்ஙனம் எனவே வரும். ஆதலின் அதனை விட்டுவிடலாம்.

(a) நிலைமொழி யிறுதியில் ணகர மெய்யும், வருமொழிமுதலில் ஞகரம் அல்லது மகர மெய்யும் நிற்குமானால், எல்லாத் தொடர்களிலும் இயல்பாய்ப் புணரும்.

தூண் + முறிந்தது = தூண்முறிந்தது
நாண் + ஞெகிழ்ந்தது = நாண்ஞெகிழ்ந்தது } எழுவாய்த் தொடர்

உண் + மகனே = உண் மகனே
உண் + ஞமலி = உண் ஞமலி
(ஞமலி = நாய்) } வினைமுற்றுத் தொடர்

குறிப்பு:— நிலைமொழி ஏவல்வினைமுற்றாகையால், உண்ணு மகனே, உண்ணு ஞமலி, என உகரச்சாரியை பெற்றும் புணரலாம். ஆனால், உண் ஞமலி, என்பது உண்கின்ற ஞமலி என்று விரியக்கூடிய வினைத் தொகையாய் நிற்குமானால் அப்பொழுது சாரியை பெறாமல் உண்ஞமலி என்றே புணரலாகும்.

மண் + ஞிமிறு = மண்ஞிமிறு — மண்ணால் செய்த ஞிமிறு என்று விரியக்கூடிய இது மூன்றும்வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகை (ஞிமிறு = வண்டு)

கண் + மயக்கம் = கண் மயக்கம் — ஆறும்வேற்றுமைத் தொகை

தூண் + முறித்தான் = தூண் முறித்தான்— இரண்டாம் வேற்றுமைத் தொகை.

(b) நிலைமொழி யிறுதியில் ணகரமெய்யும் வருமொழிமுதலில் நகர மெய்யும் நிற்றல்.

(1) நிலைமொழி ணகர மெய்யை ஈற்றிலுடைய இரண்டெழுத்துச் சொல்லாயிருந்து, அவ்விரண்டு எழுத்துக்களிலும் முதலெழுத்துக் குறிலாகவும் இருக்குமானால் வருமொழிமுதலில் நகரம் வர— நிலைமொழியீற்று ணகரமெய் அப்படியே யிருந்து, வருமொழிமுதல் நகரம்மாத்திரம் எல்லாத் தொடர்களிலும் ணகரமாகத் திரியும்:—

விண் + நாடு = விண்ணாடு—இது விண்ணாகிய நாடு என விரியுமானால் பண்புத் தொகையும், அல்லது, விண்ணில் உள்ள நாடு, என விரியுமானால் ஏழாம்வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகையும் ஆகும்.

கண் + நீர் = கண்ணீர்—கண்ணிலிருந்து வரும் நீர் என விரியும் இது ஐந்தாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

உண் + நீர் = உண்ணீர்—உண்ணுகின்ற நீர் என விரியும் இது வினைத்தொகை.

விண் + நோக்கினன் = விண்ணோக்கினன்— இரண்டாம்வேற்றுமைத் தொகை.

மண் + நாய் = மண்ணாய் — மூன்றும்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

உண் + நங்காய் = உண்ணங்காய்—வினை முற்றுத் தொடர்.

கண் + நோக்கம் = கண்ணோக்கம் — ஆறும்வேற்றுமைத் தொகை.

(2) நிலைமொழி இரண்டெழுத்துக்களுக்கு மேற்பட்டதாகவேனும், அல்லது இரண்டு எழுத்துக்களால் அமைந்ததாயின் முதலெழுத்து நெடிலாகவேனும், இருந்து ணகரமெய்யை ஈற்றில் உடையதாக, வருமொழிமுதலில் நகரமெய் நிற்குமானால் எல்லாத் தொடர்களிலும், முன் காட்டியபடி வருமொழிமுதலில் உள்ள நகரம் ணகரமாகத் திரிவது மாத்திரமல்லாமல் நிலைமொழியீற்றிலிருக்கும் ணகர மெய் கெட்டுவிடும்.

தூண் + நின்றது = தூண் + ணின்றது = தூணின்றது—எழுவாய்த் தொடர்— வருமொழி முதலிலுள்ள நி என்பது ணி என்று திரிந்து, தூண் என்னும் நிலைமொழியின் ஈற்றிலுள்ள ண் கெட்டு, தூணின்றது என ஆயிற்று.

காண் + நீ = காண் ணீ = காணீ—வினைமுற்றுத் தொடர்

ஆண் + நாய் = ஆணாய்—பண்புத் தொகை.

திருமண் + நெற்றி = திருமணெற்றி—இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை

பரண் + நீங்கினன் = பரணீங்கினன் — ஐந்தாம் வேற்றுமைத் தொகை.

பூண் + நோக்கினன் = பூணோக்கினன் — இரண்டாம் வேற்றுமைத் தொகை.

III நிலைமொழியிறுதியில் ணகரமெய் + வருமொழிமுதலில் வல்லினமெய்.

மொழிக்குமுதலில் வரக்கூடிய க ச த ப என்னும் வல்லினமெய்கள் நான்கனுள், க ச ப என்ற மூன்று எழுத்துக்களை ஒன்றாகவும், த என்னும் எழுத்தை வேறாகவும் எடுத்துக் கொள்வோம்.

(a) நிலைமொழி யீற்றில் ணகரமெய் யிருக்க வருமொழிமுதலில் ககர, சகர, பகர மெய்கள் நிற்குமானால், ஆறும்வேற்றுமைத் தொகையிலும் மற்ற வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகளிலும், பண்புத் தொகையிலும், நிலைமொழி யீற்று ணகரமெய் பெரும்பாலும் டகர மெய்யாகத் திரியும்:-

கண் + கடை = கட்கடை — ஆறும்வேற்றுமைத் தொகை.

கண் + பொறி = கட்பொறி — கண்ணாகிய பொறி எனவிரியும் இது பண்புத்தொகை.

மண் + குடம் = மட்குடம்...மூன்றும் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

மண் + புழு = மட்புழு— ஏழாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

கண் + சாடை = கட்சாடை — ஆறும்வேற்றுமைத் தொகை.

குறிப்பு:—இவ்விதிக்கு அடங்காத வழக்குக்களும் சொற்களும் சில உள. அவைகளை முற்றிலும் வரையறுத்து இயம்புதல் இயலாது. இலக்கியங்களில் இவை பயின்றுவரும் விதங்களை ஓர்ந்து ஓர்ந்து தேர்ந்துகொள்ளவேண்டும். அவைகளில் சிலவற்றை மாத்திரம் இங்குக் காட்டலாம்:—

(1) ஆண், பெண், என்னும் பொதுப்பெயர்களுக்குப்பின் வல்லினம் வந்தால், எந்தத் தொடரிலும், ணகரம் டகரமாகத் திரியாது.

பெண் + கை = பெண்கை — ஆறும் வேற்றுமைத் தொகை.

ஆண் + சாதி = ஆண் சாதி—பண்புத்தொகை.
பெண் + பறவை = பெண்பறவை-பண்புத் தொகை.
பெண் + குணம் = பெண் குணம்—நான்காம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. பெண்களுக்கு உரிய குணம் என விரியும்.

(2) பாண், உமண், அமண், போன்று, சாதி கூட்டம் முதலியவைகளைப்பற்றி வருகின்ற பெயர்களின் ஈற்றிலுள்ள ணகரமெய், வருமொழி முதலில் வல்லின மெய் வர, ஒருதொடரிலும் டகரமாகத் திரியாது.

பாண் + குடி = பாண்குடி
உமண் + சேரி = உமண்சேரி
அமண் + பள்ளி = அமண்பள்ளி
} ஆறும் வேற்றுமைத்தொகை

[பாண் = பாவோர் சாதி; உமண் = உப்புவணிகர் சாதி; அமண் = அருகனை ஆராதிப்பார் கூட்டம்]

இவை, பாட்குடி, உமட்சேரி, அமட்பள்ளி, எனப் புணரா. மற்று, இயல்பாகவேனும், பாணக்குடி, உமணச்சேரி, அமணப்பள்ளி, என அகரச்சாரியை பெற்றேனும் புணரலாம்.

(3) ஊண், விண், கவண், பரண், என்னும் இந்நான்கு சொற்களின் ஈற்றிலுள்ள ணகர மெய், வருமொழிமுதலில் வல்லினம்வரினும் ஒருதொடரிலும் டகரமாகத் திரியாது.

ஊண் + சுவை = ஊண்சுவை— ஆறும்வேற்றுமைத் தொகை.

விண் + கதிர் = விண்கதிர்—ஏழாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

கவண் + குறி = கவண் குறி—கவணால் அடிக்கும் குறி—மூன்றும் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

பரண் + கால் = பரண் கால்—ஆறும் வேற்றுமைத் தொகை

(4) எட்டு, என்னும் எண்ணலளவைச் சொல், எண் என நின்று புணரும்போது, அதனீற்றிலுள்ள ணகரமெய், வருமொழிமுதலில் வல்லினம் வரின் பண்புத்தொகையிலும் டகரமாகத் திரியாது.

எண் + குணம் = எண் குணம்
எண் + சாதி = எண் சாதி
எண் + பாகம் = எண் பாகம்
} பண்புத் தொகை

(5) சாண், என்னும் நீட்டலளவைச் சொல்லின் ஈற்றிலுள்ள ணகரமெய் வருமொழிமுதலில் வல்லின மெய்வரப் பண்புத் தொகையில் டகரமாகத் திரியலாமாயினும், திரியாமல் இயல்பாய்ப் புணர்வதே சிறப்புடைத்து.

சாண் + கோல் = சாட்கோல்—சாண்கோல்.

(b) ஆறும் வேற்றுமைத் தொகை, மற்ற வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை, பண்புத் தொகை; ஆகிய இத்தொடர்களல்லாத மற்றத் தொடர்களில் நிலைமொழி யீற்று ணகரமெய் வருமொழிமுதலில் வல்லின மெய் வர, டகரமாகத் திரியாது இயல்பாயிருக்கும்.

கண் + பெரிது = கண் பெரிது
தூண் + சிறிது = தூண் சிறிது
} எழுவாய்த் தொடர்.

மண் + காத்தான் = மண் காத்தான்—இரண்டாம் வேற்றுமைத் தொகை.

மண் + படிந்தான் = மண் படிந்தான்—மண்ணிற் படிந்தான் எனவிரியும் இதுஏழாம்வேற்றுமைத் தொகை.

உண் + சோறு = உண் சோறு—வினைத்தொகை.

கண் + கை = கண் கை—உம்மைத் தொகை.

தூண் + புயம் = தூண் புயம்—தூண் போன்ற புயம் என விரியும் இது உவமத் தொகை.

குறிப்பு:—எள், என்னுந் தானியத்தைக் குறிக்கும் எண் என்னுஞ் சொல்லின் ஈற்றிலுள்ள ணகரமெய், எழுவாய்த் தொடர் முதலிய தொடர்களிலும், வருமொழி முதலில் வல்லின மெய் வருங்கால் டகரமாகத் திரியலாம். ஆனால் திரியாமல் இயல்பாய்ப் புணர்தலே சிறப்புடைத்து.

எண் + சிறிது = எட்சிறிது—எண்சிறிது.

ஆனால், எண் + செடி = எட்செடி, எனப் பண்புத் தொகையில் திரிந்தே புணரும்.

---

# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[716-வது பக்கத் தொடர்ச்சி]

இரண்டாம் பத்து—3-ம் தசகம்.

1-ம் பாசுரம்

ஊனில்வா ழுயிரே நல்லையோ உன்னைப்பெற்று
வானுளார் பெருமான் மதுசூதன் என்னம்மான்
தானும் யானுமெல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந் [தோம்
தேனும்பாலும் நெய்யும் கன்னலு மமுதுமொத்தே.

பதவுரை:—வானுளார் பெருமான் - வைகுண்டத்தில் நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியானவர், மதுசூதனன் - உலகத்தைப் பிடித்த மது என்ற ராக்ஷஸனைக் கொன்றவரான, என்னம்மான் - எனக்கு ஸ்வாமியானவர், தானும் யானும்- ஸ்வாமியான அவரும் தாஸனான நானும், எல்லாம் - ஸர்வ பிரகாரத்தாலும், தன்னுள்ளே - நாங்கள் அந்யோந்யம் கலந்து கூடிய கலவையில், தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதுமொத்து - சர்க்கரைப்பொங்கலில் தேனும் பாலும் நெய்யும் அன்னமும் எவ்வண்ணம் ஏகரஸமாய்க்கலக்கின்றனவோ அவ்வண்ணம் எல்லா ரஸங்களும் சேர்ந்தபடி, கலந்து ஒழிந்தோம் - கலந்துகொண்டோம். ஊனில் வாழ் உயிரே - மாம்சம் கலந்த தேகத்திலே ரஸித்துக் கொண்டிருக்கிற நெஞ்சே (இது); உன்னைப் பெற்று - உன்னைப் பெற்றதினால் வாய்த்தது (ஆகையால்). நல்லை - நீ உபகாரியாய் நின்றாய்.

குறிப்புக்கள்:-இப்பாசுரத்தில்ஆழ்வார் தன்நெஞ்சை ஸிலாகித்துக் கொண்டாடுகிறார். "உன்னைப் பெற்றதினாலன்றோ பகவானுடைய கலவையில் எனக்குச் சகல ரஸங்களும் இன்பமும் வாய்த்தன. இவ்வநுபவம் இப்பூமியிலிருந்து உன்னோடு கலந்திருக்கையில் கிடைக்கத்தக்க தன்றே. வைகுண்டத்தில் நித்திய சூரிகளின் கூட்டத்திலன்றோ பகவான் ஏகரஸமாய்க் கலப்பது. இக்கலவி உன் உதவிகொண்டு இங்கயே பெற்றேனே" என்று "வானுளார் பெருமான்" என்கிற வாசகத்தால் அருளிச்செய்கிறார்.

முன் தசகத்தில் கண்ணன் பரதெய்வமென்று அறுதியிட்டவர், அவனை வழிபடுங்கோள் அங்ஙனமுள்ள வழிபாடு இன்பம்பயக்கு மென்று சொல்ல வேண்டியதாயிருக்க, தன்னோடு பகவான் கலந்தது வெகுரசமாயும் இன்பமாயு மிருந்ததென்று சொல்லப் புகுவது தனக்குவிளைந்த சமர்த்தி மிகவும் மனோஹரமாயும் ரஸமாயு மிருந்தமைபற்றித் தம் அநுபவத்தையே எடுத்துரைக்கத் தொடங்கிவிட்டாரென்று கொள்ளவேண்டும். பூர்வாசாரியர்கள் இந்த ஆரம்ப பாசுரம் கொண்டே இந்தத் தசகத்திற்கு "மிளித ஸர்வ ஸ்வாதுத்துவம்" அதாவது "எல்லா ரசமும் கலந்த இனிப்பான ருசி" என்பது கருத்துஎன்று கூறியிருக்கிறார்கள்.

கலந்தொழிந்தோம்-இனிக் கலவையில் அநுபவிக்க வேண்டிய அம்சம் கொஞ்சம் கூடப் பாக்கியில்லாமல் தாம் அநுபவித்துவிட்டதாகத் தேறி அருளிச்செய்த படி.

---

2-ம் பாசுரம்.

ஒத்தார் மிக்காரை யிலையாய மாமாயா
ஒத்தா யெப்பொருட்கு முயிராய் என்னைப்பெற்ற
அத்தாயாய்த் தந்தையா யறியாதன வறிவித்த
அத்தா நீ செய்தன அடியே னறியேனே.

பதவுரை:—ஒத்தார் - சமமானவர், மிக்கார்- அதிகர், இலையாய - இல்லாதவரான, மாமாயா - ஆச்சரியபூதனே, எப்பொருட்கும்-எப்படிப்பட்ட வஸ்துக்களுக்கும், ஒத்து - அதுபோன்று, ஆய் - ஜந்மம் எடுத்து (அதாவது,தேவன் மனுஷன் வாராஹம்அசுவம்இவைகளைப்போல விபவஅவதாரமெடுத்து அவைகளைப்போல் ஸஜாதியனும் ஆகி, மற்றும்) உயிராய் - ஆத்மாவாய், என்னைப் பெற்ற அத் தாயாய் - என்னை பெற்றெடுத்த தாயாகி, தந்தையாய் - பிதாவுமாய், அறியாதன அறிவித்த அத்தா - அறிவதற்கு அருமையான தத்துவஹித புருஷார்த்தங்களை நான் அறியும்படி கற்பித்த குருவாகி, நீசெய்தன - நீ செய்தருளிய உபகாரங்களை, அடியேன்-தாஸனான நான், அறியேன் - அளவிட்டு அறியக்கூடாதவனா யிருக்கிறேன்.

குறிப்பு:—முன்பாசுரத்தில் தம் நெஞ்சைப் புகழ்ந்தவர் அதற்கு உபகரித்த பகவானை இப்பாசுரத்தில் புகழ்கிறார். பகவான் தன்திறத்தில் செய்துள்ள நன்மைகளுக்கு ஒருமுடிவு காணாமையால் அறியேனென்று அருளிச்செய்கிறார். பாசுரத்தின் முதல்பாகத்தில் ஜகத்துக்குச் செய்யும் உபகாரத்தைப்பேசிப் பின்பாதியில் தனக்குச்செய்த உபகாரங்களை நினைத்துப் பேசியபடி.

---

3-ம் பாசுரம்

அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்பு செய்வித்து
அறியா மாமாயத் தடியேனை வைத்தாயால்
அறியாமைக் குறளாய் நிலம்மாவலி மூவடியென்று
அறியாமை வஞ்சித்தா யெனதாவியுள் கலந்தே.

இப்பாசுரத்திற்கு ஸ்ரீராமாநுச முனிகள் உரைத்த அர்த்தம் பின்வருமாறு:—அறியாமை - ஒருவரும் உன்னை மஹாவிஷ்ணுவாக அறியாதபடி, குறளாய் - குள்ள வாமந ரூபமாய், "நிலம் மாவலி மூவடி"-"மகாபலி சக்ரவர்த்தியே நீ எனக்கு மூன்றடி நிலம் கொடு" என்று பொருள்படும் பதங்களைச் சரியாய் அந்வியத்துப் பேசத்தெரியாத சிறு குழந்தையைப் போலே,எழுவாய் பயனிலை முதலான பதங்களைக் கூட்டிச்சொல்லாமல், தழை தழைத்த குரலினால் குறைவேண்டி, அறியாமை வஞ்சித்தாய் - மகாபலியின் ஆசான் சுக்கிராசாரியார் 'உன்னிடத்தில் யாசகம்செய்ய வந்துளான் மஹாவிஷ்ணு'வென்று எச்சரித்தும் அதை மகாபலி உட்கொள்ளாமல் தானம்கொடுக்க இசையும்படி செய்து வஞ்சனையாய் மூன்றுலோகங்களையும் கவர்ந்து கொண்டவனே! என் ஆவியுள் கலந்து - என் ஆத்மாவோடு ஸம்பந்தித்து, அறியா மாமாயத்து - ஞான விரோதியான ஜடப் பிருகிருதியில், அடியேனை - பிருகிருதியால் மூடப்பட்ட தாஸனான என்னை, அறியாக் காலத்துள்ளே - ஞானத்தாலே ஒன்றும் அறியக்கூடாத இளம்பருவத்திலேயே, அடிமைக்கண் - தொண்டு செய்வதில், அன்பு செய்வித்து-உருசியை யுண்டாக்கி, வைத்தாய் - அத் தாஸ்ய ரசத்திலே ஊன்றியிருக்கும்படி செய்தாய்.

இந்தயோஜனையின் அந்வயம்—"அறியாமாமாயத்து அடியேனைவைத்தும்அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்தாய்" என்ற இந்த யோஜனையில் ஸ்வாரஸ்யம், முன்பாசுரத்தில் நீ செய்த உபகாரங்களுக்கு முடிவுகாணேன் என்றவர் அந்த உபகாரங்களின் ஸாரமான தாஸ்யரஸத்தைப் பகவான் தனக்குச் சிறு சிசுவாயிருக்கும்போதே கொடுத்தருளினானென்று ஆகிறது.

பாட்டின் போக்கை அநுசரித்தும் "ஆல்" என்கிற பதம் துக்கஹேதுவைக் காட்டும் என்கிறதை உட்கொண்டும் யாமுநமுனிகள் தம் சீடருக்குப் பொருள் குறித்தவாறு:—தொண்டுசெய்வதில் வெகுஇளம்பிராயத்திலேயே எனக்கு உருசியை உண்டாக்கித் தந்த நீ என்னை ஜடபிருகிருதியிலேயே வைத்திருக்காயே என்று ஆழ்வார் விசனப்படுகிறார் - இந்த யோஜனையில் அடிதுடங்கி வாக்கியம் ருஜுவாக அந்வயமாகிறதும் தவிர "ஆல்" என்கிற பதத்துக்கு அர்த்தம் கிடைப்பதும் குறிகொள்ளத் தக்கது. ஆனால் முன்பாசுரத்தில் பகவானிடத்தில் தன் சந்தோஷத்தையும் உபகார ஞாபகத்தையும் செப்பிய ஆழ்வார் இப்பாசுரத்தில் வியஸநமடைவதாகச் சொல்வது உசிதமன்று; மேலும் அடுத்த பாசுரங்களிலும் தம் திருவுள்ளம் பகவானிடத்தில் சந்தோஷமாய் ஈடுபாட்டை அடைந்ததாகப் பேசுகிற சந்தர்ப்பத்திற்கு இப்பாட்டுக் குறைகொள்வதாகப் பொருள் கூறுவது உசிதமன்று. இவற்றை எல்லாம் உட்கொண்டே ஸ்ரீராமாநுஜ முனிகள் முதலில்கூறியபடி அர்த்தம் தம் சீடர்களுக்கு உரைத்தார். எனினும் ஆறாயிரப்படி உரைகாரர் இரண்டு யோஜனைகளும் பொருந்துமென்று அவை இரண்டையும் தழுவிச் சுருக்கமாய், "ஆழ்வார்தம் திறத்திலே எம்பெருமான் செய்தருளின நன்மையைப் பேசுகிறார்" என்று ஸங்கரகித்து எழுதியிருக்கிறார். இவ்வுரைகாரரின் திருவுள்ளம், ஒரு ஆசான் சொன்னது ஸரி மற்றொரு ஆசான் சொன்னது பிசகு, என்று பின்னுள்ள சீடர்கள் நினைக்க ஒண்ணாது என்பதே.

4-ம் பாசுரம்.

எனதாவியுள் கலந்தபெரு நல்லுதவிக் கைம்மாறு
எனதாவி தந்தொழிந்தே னினிமீள்வதென்பதுண்டே
எனதாவி யாவியும்நீ பொழிலேழு முண்ட வெந்தாய்
எனதாவியார் யானார்தந்த நீகொண் டாக்கினையே.

பதக்குறிப்புக்கள்:—"உள் கலந்த" என்பது, முதல் பாசுரத்தில் "தானும் யானுமெல்லாம் தன்னுள்ளே கலந்து" என்பதைக் குறிக்கிறது. மீள்வது என்பதுண்டோ - என் ஆத்மாவை உனக்குக் கொடுத்து விட்டால் பிறகு திரும்பி அதைவாங்கிக் கொள்கையுண்டோ - இல்லை. கொண்டாக்கினை - பெற்றுக் கொண்டு முடித்தாய், அதாவது, பெற்றுக்கொண்டாய், இவ்வளவு தானே.

"இப்படி எம்பெருமானோடு கலந்த கலவியாலுள்ள நிரவதிகப் ப்ரீதியாலே யறிவழிந்து தன்னுடைய தன்று என்று நிரூபிக்கமாட்டாராய் அவன் தம்மோடு கலந்த இப்பெரு நல்லுதவிக்குக் கைம்மாறாகத் தம்முடைய ஆத்மாவை அவனுக்கு மீளா அடிமையாகக் கொடுத்து, பின்னையும் தம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி விவேகத்தால் அறிந்து "தருகிற தான் யார் தரப்புகுகிற இவ்வாத்மா யார்; பண்டே யுனக்கு உரித்தானதும் உன் இஷ்டப்படி உபயோகிக்கக் கூடியதுமான இவ்வாத்மாவை நீ கொண்டருளினும் அத்தனையே அல்லவா வென்கிறார்"—ஆறாயிரப்படி.

---

5-ம் பாசுரம்.

இனியார் ஞானங்களா லெடுக்கலெழாத வெந்தாய்
கனிவார் வீட்டின்பமே யென்கடற் படாவமுதே
தனியேன்வாழ்முதலேபொழிலேழுமேனமொன்றாய்
நுனியார் கோட்டில்வைத்தா யுன்பாதம் சேர்ந்தேனே.

பதக்குறிப்புக்கள்:—"இனி" என்ற முதல்பதத்திற்குச் 'சேர்ந்தேனே" என்கிற கடைசிப் பதத்தோடு அந்வயம். அதாவது "இதுமுதல் சேர்ந்துவிட்டேன்" என்று பொருள்.

நுனி - கூர்மை, ஆர் ஞானங்களால்-எவ்வித சிரேஷ்டர்களாலும் தங்கள் ஞானத்தைக் கொண்டுமாத்திரம், எடுக்கல் எழாத எந்தாய் - அறியக்கூடாத என் தாயே - கனிவார் வீட்டின்பமே -பக்குவமான மனதை உடையவர்களால், அதாவது பகவானிடத்தில் ப்ரீதி உள்ளவர்களால், இன்பமாய் அநுபவிக்கக்கூடியவனே.

பொழிப்புரை:—"தன்னை ஆச்ரயிக்காதவர்கள் எவ்வளவு பெரியோரேனும் அவர்களுடைய ஞானங்களைக் கொண்டு கண்டுபிடிக்கக் கூடாதவனாயிருக்கையில் தன்னிடத்திலேயே மனதைச் செலுத்தியவர்களுக்குச் சுலபமாயும்இரசமாயு மனுபவிக்கக்கூடியவன். அவ்வளவுக்குப் பக்தியில்லாத எனக்கும்கூட ரஸமாய் அநுபவிக்கக் கூடியவனாயினான். சமுத்திரத்திலே பூமியுடன் அழுந்திக் கிடந்த ஆத்மவர்க்கங்கள் அநந்யகதிகளாயிருப்பதை நோக்கிப் பரமதயவினாலே ஒருவரும் வேண்டிக்கொள்ளாமலிருக்க, அவைகளெல்லாவற்றையும், காத்தவன். பழமையான தரித்தரத்தை மறந்து எப்பொழுதும் தான் ஐசுவரியவானாக இருந்ததாக நினைப்பது ஸஹஜம்போல் ஆழ்வார் உள்ளத்தில் இப்போது நடைபெறுகிற பகவத்தாவிய ரசம் இது முன்பிறப்புக்களிலும்கூடத் தான் அநுபவித்ததாகத் தோன்றிற்று. ஏனெனில் பகவத்பக்திக்கு ஸர்வ பாபங்களையும் போக்க வல்லமையிருப்பதால் இப்பிறவியில் பகவத் பக்தி தமக்குக் கிடைத்ததிலிருந்து முன்பிறப்பிலேயே பாபங்கள் நசித்துப்போயிருக்கவேண்டுமென்று ஊஹிக்க இடமுண்டு. அவ்வண்ணம் பாபங்கள் நசிப்பது பகவத்பக்தியின் குணமாக இருக்கவேண்டுமென்பது ஊஹம். இதனால்தான் "முதல் முன்னமே"- முந்தியதற்குமுன்னம், அதாவது "அநாதி காலத்திலேயே அடைந்தேன்" என்று பாசுரத்தின் முடிவில் அருளிச் செய்கிறார்.

போன காலத்திலும் பகவானுடன் கலந்தோம் என்று தமக்குத் தோன்றும்படி இப்பொழுது தாம் எம்பெருமானுடனே கலக்கையாலே ஆச்ரிதர்களின் பாபங்களுக்கு நஞ்சாய்த் தன்னை அடையும் விஷயத்தில் அவர்களுக்கு ஞானத்தைப் பிரஸாதம் பண்ணுபவனாய், இப்படி ஞானம் அடைந்தமையால் ஸ்திர பக்தியுள்ளவர்களைச் சம்சாரத்தில் புகக் கைவிடாமல் அவர்களுடன் இடைவிடாமல் கலந்துருசியூட்டும் சுபாவனுமாயிருந்த உன்னுடன் இன்றோ நான் கலந்தது. அடியேன் உத்பவித்காலம்தொட்டு இந்தக் கலவையைப் பெற்றேனன்றோ" என்கிறார்.—ஆறாயிரப்படி.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்




டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்ளுக்கு ரூ. (1-8-0)பிரான்சு:

டிப்போ, பம்பாய் கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
மதுரை காஞ்சீபுரம்.




# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[855-வது பக்கத் தொடர்ச்சி]

மன்னவன் புகழைக் கொன்றே
மாதராள் பழியைப் போக்கல்.

விவாக காலத்தில் அயோத்திநாடுடைய வேந்தன் தன் அரசினைச் சுல்கப் பிரதிக்ஞை செய்திருந்தனன் அல்லன் என்பது இவ்வாராய்ச்சிவரையில் அவசியமுடைத்தன்று. மற்று, மணவினைமுன்னிட்டும் விபத்துற்றவேளையிலும் வழங்கியவொரு வாக்கினை நிகழ்த்தியே தீரவேண்டுமெனும் நியதி யில்லையெனச் சாத்திர மேற்கோள்களால் தயரதன் தன்மையைக் காக்கும்பொருட்டு இங்கு யாதும் முயலவும்வேண்டா. அதுவுமன்றி, வான்மீகிமுனிவர் சுல்கப் பிரதிக்ஞையின் உண்மையை 'விசதமாக'க் கூறினாரோ என்னுங் கொள்கை ஒரு புறமிருக்க, அவ்வுண்மையின் நினைவினாற்றான் கைகேயி செய்தன செய்பலாயின என்னும் துணிவிற்கு மாறான முறையிலேயே அவர் தன் கதையை நிகழ்த்தி வைத்துள பான்மையை முன்னர்க் கண்டோம். எனினும், ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரவர்களது கட்டுரையால் முடிந்தபொருளின் தகுதியைத் தாக்கி நோக்குங் கருமத்தினுக்கு இவையனைத்தும் ஒரு சிறிது அயலாகவே நிற்கின்றன. முதனூலில் முடிந்தபொருள் எதுவாயினும் அதனைக் கம்பர் பெருமானது மெய்யுணர் கலைச்சுவை எவ்வகைப் போர்வையால் புனைந்து காட்டிய தென்பதொன்றமட்டுமே இவ்வயின் இருந்து கண்டின்புறுதற்குரியது. 'கெடுத் தொழிந்தனை' என்ற செய்யுளிலேனும், 'வரனிலுந்தை சொல் மரபினால்' என்ற செய்யுளிலேனும், சுல்கச்சூளை முன்னிட்டே சொல்லியிருத்தல் வேண்டுமென ஐயங்கொள்ளற்கு உரியதொன்றுமிலாமை இதுகாறு மாய்ந்தறிந்தவைகளினின்று விளங்குவதருமையன்று. இவையனைத்தையு மிணைத்து நோக்குங்கால் சுல்கச்சூளொன்றும் கம்பரது நூலினுள் வழிபெறவில்லை யென்பது நிச்சயம்.

இஃதிவ்வாறாக, ஸ்ரீமான் பாரதியார் சுல்கச் சூளுண்மையையும் அதனாற்றான் கைகேயி வரமிரண்டுமிரந்தாளென்றும் சாதிக்க எற்றுக் கித்துணை முயல்கின்றார் என வினவின் அதற்கொரு விடை,

"தகவின்றித் தந்தை கோபத்தாற் றள்ளிய வசை வெள்ளத்தினின்று இவரை (கைகேசியையும் பரதனையும்) கரையேற்றுங் கருத்தாலன்றோ செம்மல் (இராமன்) சதசிருந்து யாவரும் அறிய இவ்வரலாறு கூறி உண்மையை உலகறிய வெளிப்படுத்தியது. அதை மறைத்துக் கைகேசி பழிவளர்க்க விரும்புபவரே மன்னையர்க்கரசியின் மாசிலா நிறையறக் கொலைஞராவதோடு இராமன் பெருவிருப்பழித்து அவனபசாரத்துச்சும் ஆளாவர். இராமன் உளக்கிடக்கை யறிந்தே கம்பரும் வான்மீகரைப் போல வெச்சென்றுரையாவிடினும், இவ்வுண்மையைக் கரவாது உரைத்துள்ளார். ஆடவர் பழிசுமந்தும் மடந்தையர் புகழ்பேணுவது ஆண்மையறமாம். அப்படியிருக்கக் கைகேயி மெய்ப்புகழும் கற்பும் கொன்று தவறுடைய தசரதன் பொய்ப்புகழ் வளர்ப்பது, "ஏதங்கொண்டு ஊதியம் போகவிடும் பேதைமை" பாலதேயா மன்றோ? கம்பர் அறவே மறைப்பினும் இவ்வுண்மை வெளிப்படுத்துங் கடமை காண்பதன்றோ தமிழ் மரபு..........ஈண்டு, பொய்யாமொழி ஆரியப்புலவனோடு மெய்வழாத் தமிழ்ப்பாவலனும் உரைத்துப் போந்ததும், கற்பரசியின் மெய்ப்புகழோம்பும் நற்பயன் தருவதுமான உண்மையை வலியுறுத்த ஆற்றலுந் தகவும் போதாமைக்கே கவல்வதல்லால், இயன்றவரை கண்டது உரைக்கப் பிரிதுபுகல் தேடுவேனல்லேன்."

எனவரும் அவர் வாசகத்தினா லெய்தலாம். மெல்லியல் மாதராரைப் பழிசென்று சாராவண்ணம் காத்தல் ஆண்டகைக்குரிய மேன்மையே. ஆயினும் அம்மேன்மையை யெய்துதற்கோர் செவ்வி வாய்க்கும்பொருட்டுப் புருடர்சிலர் பழியுணக் காணல் நேரிதன்று. உள்ளபடி நிகழ்ந்ததை நோக்குங்கால் கைகேயியை யாரும் வெறுத்துப் பழிக்கவும் வேண்டா. இமையவர் செய்த பாபத்தால் கைகேயி இராமன்பால் இரக்கந் துறந்தவள்போலாகித் தன்மகனாக்கத்தையும் தேடும்வழிக்கண் தூண்டப்பெற்றன ளாதலைக் கம்பர் பெருமானோடு கருத்தொத்துணரவல்லார்க்கு மற்றோரிடரில்லை. பின், கைகேயியின் 'மெய்ப்புகழையும் கற்பையும்' கொன்றபடியாகாது. அவளுடைய புகழைப் பரிவுடன் தாங்கவரும் ஸ்ரீமான் பாரதியார் தயரதனுடைய பழியைக் கொன்னே வளர்க்கப்புகுவது மிகவும் வருந்தத்தக்கதே. தயரதன் பழியிலேயே கைகேயியின்புகழ் தங்கவேண்டி அவர் கொள்கையின்படி அமைகின்றதாகையால் அப்பழியை அவர் மிக வளர்க்க முயல்வது வியப்பன்று. எத்துணை எத்துணை எடுத்தியம்பினாலும், தயரதன் தான் முன்வழங்கிய வாக்கிற்கு மாறாக இராமனுக்கு முடிசூட நினைத்தானென்றேனும், அவ்வாக்கினில் அவனை நிறுத்தும் பொருட்டே வரமிரண்டையும் நிபமாய்வைத்துக் கைகேயி விவகரித்தனள் என்றேனும் உணர்த்துதற்குரிய வாசகங்கள் கம்பர் நூலிலேனும் வான்மீகத்திலேனும் விசதமாகவேனும் மறைவாகவேனும் இருக்கவில்லை. ஆயினும், தன்மதத்தை ஐயமற நிறுவுதற்குதவியாய ஒன்றிரண்டிருந்தாலாகாதோவென ஸ்ரீமான் பாரதியார் ஆர்வமுடன் விரும்பியிருத்தல் இயற்கையே. அகமே புறம். உள்ளத்தில் வலுத்துறைந்த விருப்பங்களுக் கிணங்கியே புறத்துள்ளவைகள் பொருள்படத் தோன்றும் என்னுந் தத்துவத்திற்கொத்து,

"தன் நெஞ்சறியச் சுல்கச்சூளறம் பொய்த்தான் (தயரதன்): பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடுவதாயிற்று. பொய்யுளம் புழுங்கத் தம் புரைபுகை வாயால் மெய்நிறுவ முயல்வாரை வைது, தங்குறை மறைக்கப் புகல் தேடுவது அறனஞ்சா வஞ்சனெஞ்சரியல்பாம். தன் காதற்கிழவனை அறவழி நிறுத்துங் கற்புக் கடனாற்றுவதையே கருதி, எனைத்தானும் அவன் சொற்சோர்வைச் சுட்டாமற் கணவன் வாய்மையையும் காக்க விரும்பித் தனக்கு அவன் தந்த வரத்தை வியாஜமாக்கி அவன் நெஞ்சறி புரை விருப்பை நிறைவேற்றவிடாது தடுக்கும் தெய்வக்கற்பினளான கைகேயி [illegible]

விரித்துள்ளேன். இதையே வான்மீகரும் இராமன் வாயா லினிது விளக்கியிருக்கின்றார். கைகேயியின் விவாக காலத்திற் றசரதன் செய்த சுல்கப்ரதிஜ்ஞை யைப் பரதனுக்குச் சொல்லியபின், "இந்தக் கார ணத்தால் நமது தகப்பனாரை மெய்யனுக்கக் கருதிய கீர்த்திவாய்ந்த உன் தாயார் இரண்டு வரங்களைக் கேட்டுக் கொண்டார்." எனத் தன் சிற்றன்னையின் றோமில் அமனப்பாங்கை இராமனே எடுத்துரைத் துத் தம்பியைத் தெருட்டுகின்றான்."

எனப் பாரதியார் வரைந்தனர் போலும். இங்குத் தயரதன்பழி மலையளவு வீங்குகின்றது. வீங்கிய இவ்வீக்கம் வாடாமலிருக்கும்பொருட்டு, அவன் நெடும்பழி பூண்டுநின்றானென்பதைப் பசுமரத்தாணி யாய் அறையும் நினைவினராகி இராமனது வாசக மொன்றை வான்மீகிஇராமாயணத்திலிருந்து மேற் கோளாக எடுத்துக் காட்டுகின்றனர். அதன் அமை தியை ஆயுங்கால். ஸ்ரீமான் பாரதியார், சுலோகப் பொருளினும் தம்முடைய ஆர்வத்தையே அதிகமும் விரைந்து தொடர்கின்றதன்மை நன்கு புலப்படு கின்றது.

"கைகேயியின் விவாக காலத்தில் தயரதன் செய்த சுல்கப்பிரதிஜ்ஞையைப் பரதனுக்குச் சொல்லியபின், 'இந்தக் காரணத்தால் நமது தகப்பனாரை மெய்யனுக் கக் கருதிய கீர்த்திவாய்ந்த உன் தாயார் இரண்டு வரங் களைக் கேட்டுக்கொண்டார்' என்று இராமன் கூறின தாக வால்மீகி இராமாயணம் அயோத்தியாகாண்டம், 107-வது சருக்கம், 5-வது சுலோகத்தில் காணப்படு கின்றதென்பர் பாரதியார். இராமனுக்குத்தான் இந்த இரகசியம் எப்பொழுது யார்சொல்லித் தெரிந்ததென் பதைப் பின்னர்ப்பார்ப்போம். அதன்முன்னர்,ஸ்ரீமான் பாரதியார் இணங்கிய மொழிபெயர்ப்பிற்குரியபடி சுலோகம் அமைந்திருக்கவில்லை என முதலில் அயிர்க்க வேண்டி நேர்கின்றது. இம்மொழிபெயர்ப்பு நேரிதா யின் ஸ்ரீமான் பாரதியாரது கொள்கை உரம்பெற் றுப் பலபடி உயரலாம். ஆனால் வான்மீகத்தைப் பார்க்கும்பொழுது, 'சுல்கப் பிரதிக்ஞையைப் பரத னுக்குச் சொல்லிய பின், இதனைச் சொல்லினன் அல் லன் இராமன். தேவாசுரயுத்தத்தில் கைகேயி மன்ன வனிடத்தில் வரம்பெற்ற வரலாற்றைச் செப்புகின்ற னன். அதன்பின், "ததஸ்ஸா ஸம்பாதிச்ராவ்ய தவமா தா யசஸ்விநீ அயாசத நரச்ரேஷ்டம் த்வௌவரௌ வரவர்ணினீ" என்பது வான்மீகர்சுலோகம். இதனிற்கு, தத: = பிறகு, ஸா = அப்படிப்பட்ட, யசஸ்விநீ = கீர்த்தியை உடையவளும், வரவர்ணினீ = சிறப்பை உடையவளும் ஆகிய, தவ = உன்னுடைய, மாதா = அன்னையானவள்,சம்பாதிச்ராவ்ய = சபதத்தைச் செய் யும்படி செய்து, நரச்ரேஷ்டம் = அரசனை, த்வௌ = இரண்டு, வரௌ = வரங்களை, அயாசத = யாசித் தாள்—என்பதே உரையெனத் துணிகின்றோம். கோவிந்தராஜருடன்.'தத:' என்பதை 'ஸம்பாதிச்ராவ்ய' என்பதற்குப் பின்வைத்து அந்வயம்செய்து "உன் னுடைய மாதா அரசனைச் சபதம்பண்ணும்படி செய்து பிறகு இரண்டு வரங்களை யாசித்தாள்" எனப் பொருள்காணில் கதைநிகழ்ச்சிப் பின்னும் பொருத்த மடைவது மன்றி ஸ்ரீமான் பாரதியாரது உரையி னின்று இது இன்னுஞ் சிறிது அகலச்செல்லும். என வே, "இந்தக் காரணத்தால் நமது தகப்பனாரை மெய்ய னுக்கக்கருதிய" என்று தமிழில் பெயரக்கூடிய மொழி யொன்றிற்கும் வான்மீகர் சுலோகத்தில் ஆதார மில்லையே. இந்தச் சுலோகம் அல்லாவிடினும் அந்தச் சருக்கம் அடங்கலும் நோக்கினும் இம்மொழிபெயர்ப் பிற்கு இடமொன்றுங் காண்கிலம். இராமன் தோள் வலி கூறுவார்க்கு 'நாடியபொருள் கைகூடலாம்,' ஆனால் ஒவ்வொரு சுலோகமும் கற்பகம்போல் வேண் டிய பொருளை வழங்குமென்பது அத்துணை நிச்சய மன்று. எனினும் முன்னிங்குரைத்தபடி ஒரு கருத் தினில் நிலைத்தமனம் தன்னுடைய விழைவிற்கேற் பக் கற்பித்துக்கொள்ளக் கல்லாத உருவுமில்லை— உரையுமில்லை.

இவ்வண்ணம் பலபடக் கட்டுரைத்து ஸ்ரீமான் பார தியார் காட்டமுயல்வது இரண்டு. ஒன்று கைகேசி யின் கற்பறச்சிறப்பு; மற்றது பரதனது மேன்மை. இந்த நன்மை பயக்கும் பொருட்டே சுல்கச் சூளுண் மையை, "புலவரும் இராமனும் புகன்றிலராயினும், பயன் பலர் நயவாரெனினும்" தான் வெளியாக்குங் கடமையை மேற்கொண்டாரென விளம்புகின்றார். கொழுநன்றன் வாய்மையைப் போற்றுமொரு தூய நோக்கமேகொண்டு கைகேயி விவகரித்தனள் என்னு மிவர் முடிவு பொய்யேயாகுக, மெய்யே யாகுக. பொய்யேயாயினும் அது புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின் வாய்மையின் பாற்படுமென நம்பி ஒருவாறு ஆறலாம். ஆதலின், பாரதியார் எதிர்நோக்கும் நன் மையேனும் இதனால் கைவரலாகின்றதோ வென்பதை யும் இனிச் சிறிது கருதுதல் வேண்டும்.

இச்சுல்கச் சூளுரையின் உண்மையால் பரதனு டைய பெருமை அதிகமாகின்றதெனப் பின் வருங் காரணத்தால் காட்டுகின்றார் :—

"இராமன் ஒருவனே தனதளிக்குந் தகையன், பரதன் தனதல்லாத் தமையனதைத் தான் பறிக்க விரும்பாதவனேயாம், என்பரேல் அவதார நோக்கம் நன்கு நிறைவேறுமை காணக்கடவர். தமயன் தம்பிக் குக் காட்டத்தகுந் தண்ணளியை, இராமன் சுல்க வுண்மை யறியாமலே பரதனுக்கு அரசுதர விரும்பிய தால் நிறுவலானன். இதனால், சகோதர வாத்ஸல்யத் தில் தமயனன்பாம் ஒருபாதியே விளக்கப்படும். தம்பி தமயனிடம் காட்டவல்ல பேராதரப் பெருமை விளங்கு மாறில்லை. தன்னுடையமையான பேரரசைத் தமய னுக்குத் தான் உவந்தளித்த பரதன் மெய்க்காதற் கதையால் மட்டுமே அப்பாதியும் விசதமாகும். தனக் குரியதென நினைத்த தமயனும், பின் தன்னுடைமை யென்றறிந்த தம்பியும், முறையே ஒருவன் மற்றவ னுக்கு 'ஏத்தப்படும் வேத்தியல்' வழங்க விரும்பிய மெய்வாத முழுவரலாறுங் கண்டபோது தான், பிரா தாக்கள் பாஸ்பரம் கொள்ளத்தகும் உண்மைக் காத லும், தனை மறந்து காதற் கடனாற்றும் அவர் பெருந் தகைமையும் ஒருங்கே விளங்குவதாகும்.

முதல் நோக்கிற்கு இக்காரணம் உண்மைபோல் தோன்றலாம், எனினும், தன்னுரிமையைத் தானஞ் செய்வதைக் காட்டிலும் தானே கவர்ந்தேனும் தனக் காகப் பிறரால் கவர்ந்து தரவேனும் அடைந்த வொரு பொருளை மீண்டுந்திருப்பி உரிமையுடைவன்பால் கொ டுத்துவிடுவதே மாறுட இயற்கையில் செய்வதற் கரிய தாயிருக்கின்றதென்பதை மறவோமெனில் சுல்கச் சூளொன்று மின்றியே பரதனுடைய குணமாண்பு ஆயிரம் இராமனிலும் அதிகமாய் விளங்கலாமே.




# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக் கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படலம் முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தா மணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புற நானூறு, ஐங்குறுநூறு முதலியவை களினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக் கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவா ரத்தின் துணைகொண்டு விளக்கிய கட் டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண் மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங் களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முத லிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமை யின் பொய்மை, கட்டளைக்கல், செய்வ திற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணு மலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட் டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் பட லம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவன மும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற் றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதி கள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர் வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை,திருவரங் கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திரு வரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10 நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரை கள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய் மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தா மணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய் தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பயிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பயிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

இனம்! இனம்!!

**வைத்திய வித்தியா**

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

**நீதிநெறி விளக்கம்**

நீதிநெறி விளக்க மூலமும், பதவுரை, தோகுத்துரை, விருத்தியுரை, ஆங்கில மொழி பெயர்ப்பு.

இந்நூல் திருக்குறளின் சாரமாயிருப்பது கருதி, ஒவ்வொரு செய்யுளுக்கும் அதன் கருத்தமைந்த திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையுடன். ஒவ்வொரு செய்யுளுக்கும் புதிதாக எழுதப்பெற்ற விஷயத் தலைப்புகள் வினையுருபுகள் வெண்பா என்கிற இருவிஷயங்கள். நூலாசிரியர் சரித்திரம் நூலின் பெயரிலக்கணம்(புதிய பதிப்பு விலை நூபா 1-8-0. கலா நிலயம் சந்தாதாரர்களுக்கு நூபா 1-4-0. (தபால் கூலி வேறு.)

பேதர் வெயிட் காகிதத்தில் அச்சிட்டது நூபா 2-8-0

எஸ். பி சுந்தரம் கம்பெனி,
3 பீட். பார்க் டவுன், சென்னை.

**கந்தபுராண வெண்பா**

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப்பெற்றது. தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

விலை ரூபா **4**. தபால் செலவு வேறு

EDUCATIONAL PUBLISHING CO.
**Nungambakam, Madras.**

Estd. **NATIONAL** 1906
**INSURANCE COMPANY LIMITED.**
*Head Office*:-**9, Old Court House St., Calcutta.**

Insured for how much?
Is it sufficient?
Will it hurt you to make little sacrifices to pay your Life Insurance premium?
Can we satisfy you?
For Literature
Apply to:—
**T. ANANTACHARI**, B.A.,
Branch Secretary.
NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

**தேவதாசிகள்**

அமெரிக்க மாது மிஸ் மேயோவால் எழுதப்பட்டது. இந்தியர் பழக்க வழக்கங்களைப்பற்றி எழுதியுள்ளார். படிக்க வேடிக்கை. விலை ரூ. **1-0-0**.

முத்தையா புக் டிப்போ,
தபால் பெட்டி 99, சென்னை.

**எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்**

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
**பெருமாள் திருமொழி**

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த
**ஆறெழுத்தந்தாதி**

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளார் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

**கம்பராமாயணம்—பாலகாண்டம்**
(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

**ஏமாங்கதத் திளவரசன்**
(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேராவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும்,பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

**முருகன்—ஓர் உழவன்**

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்த மொழிபெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந் நாவல்நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1-8.

விலாசம்:—கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.




# வர்த்தமானம்

ஆந்திரபத்திரிகைகாரர்களினிடமிருந்து அச்சுக் கூடத்திற்கென்று வாங்கிய 2000 ரூபாயும், பத்திரிகைக்கென வாங்கிய 2500 ரூபாயும் சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டால் சென்றவாரம் திருப்பிக்கொடுக்கப்பட்டதெனத் தெரிகின்றது.

***

ராஜத்துவேஷ முண்டாகும்படி பேசிய குற்றத்திற்காக ஸ்ரீமான் ஜவாரிலால் மீண்டும் கைதுசெய்யப்பட்டு இரண்டுவருடக் காவல்தண்டனை விதிக்கப்பெற்றார். சிறையினின்று சமீபத்தில் வெளிவந்த ஸ்ரீமான் சென்குப்தா மறுபடியும் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

***

சென்றவாரம் லண்டனில், காஷ்மீர அரசரின் தலைமையில் சுதேசமன்னர் கூட்டம் ஒன்று நடைபெற்றது. சுதேச சமஸ்தான உரிமை விஷயமாக இக்கூட்டத்தில் ஒரு முடிவு செய்யப்பட்டதென்றும், நவம்பர்மாதம் 2ந்தேதி மற்றோர் கூட்டங் கூடித் தீர்மானமான திட்டம் தயாரிக்கப்படும் என்றும் லண்டன் செய்தி கூறுகின்றது.

***

இந்தியா மந்திரி கார்யாலயத்தினர்,சர்வகட்சி மஹாநாட்டு இந்தியப் பிரதிநிதிகளைக் கர்னல் கோல் என்பவரின் மோட்டார் சாலையைப் பார்வையிடச் சென்றவார இறுதியில் அழைத்துச் சென்றனர்.கர்னல் கோல் இவர்களை வரவேற்றார். இந்தியப் பிரதிநிதிகளின் சார்பாகப் பேசிய ஸ்ரீமான் தாம்பே கூறியதாவது:—"இந்தியா அரசியல் செல்வாக்குப் பெறுமாயின் இத்தகைய கைத்தொழில்கள் அங்கும் ஏற்படும். எனவே பிரிட்டிஷார் இந்தியாவிற்குச் சமத்துவம் அளிக்க வேண்டும். இதனால் இந்தியாவும் இங்கிலாந்தும் பிரிந்துவிட நேரும் என்று எவரும் எண்ணவேண்டுவதில்லை. சிநேகமே அதிகமாகும்".

***

சர்வகட்சி மஹாநாட்டிற்கு இந்தியக் கிறிஸ்தவர்களின் பிரதிநிதியாய்ச் சென்றிருக்கும் ஸ்ரீமான் K. T. பால் பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:—காமன்ஸ் சபைகளிலுள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்களையும் மற்றுமுள்ள ராஜதந்திரிகளையும் கண்டு பேசியதில், பிரிட்டிஷார் இந்தியா விஷயமான காரியங்களில் நல்ல எண்ணத்துடன் இருக்கின்றனர் என்று தெரியலாயிற்று. இந்தியாவை விட்டு நான் புறப்பட்டபொழுது மஹாநாட்டில் அதிக நம்பிக்கையில்லை; இப்பொழுது அதிக நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. இப்பொழுது இந்தியப் பிரதிநிதிகள் அபிப்பிராய மாறுபாடின்றி ஒருமனதாய்க் குடியேற்றநாட்டு அந்தஸ்தைக் கோரவேண்டும். இந்தியருக்குள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் விஷயமாகச் சில மாறுபாடுகள் ஏற்படலாம். இச்சிறு விஷயங்களை இந்தியாமந்திரி கார்யாலயத்தினர் பொருட்படுத்தக் கூடாது.

***

இங்கிலாந்து, எகிப்து, இந்தியா முதலியவிடங்களில் செய்யப்படும் ருஷ்யப் பிரசாரத்தைப்பற்றி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியாரின் அறிக்கை வெளிவந்ததா என்றும்; வந்துளதெனில் அரசாங்கத்தார் அவ்வறிக்கையின்மேல் என்ன நடவடிக்கைஎடுத்துக்கொண்டனர் என்றும் காமன்ஸ் சபையில் கேட்கப்பட்ட கேள்விக்கு ஆர்தர் ஹெண்டர்ஸன் கூறியதாவது :—சோவியத்தாரோடு சென்றவாண்டு நாம் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி அவர்கள் பிரசாரத்தை நிறுத்தவில்லை. அவர்கள் பிரசாரம் இந்தியா முதலிய நாடுகளில் வலுத்துவருகின்றது. அரசாங்கத்தார் இவ்வறிக்கையின் முடிவை ருஷிய அரசாங்கத்தாருக்குச்சொல்லி,அவர்கள் உடன்படிக்கையின்படி நடந்துகொள்ளாவிட்டால் பிரிட்டிஷார் எந்தவிதமான சம்பந்தமும் ருஷியாவுடன் வைத்துக்கொள்ள முடியாதென்று தெரிவித்தனர். அதற்கு ருஷிய அரசாங்கத்தார், தாங்கள் உடன்படிக்கைப்படியே நடந்துவருவதாகவும், இனியும் நடக்கப் போவதாகவும் பதில் கூறியுள்ளார்கள், என்று லண்டன் செய்தி கூறுகின்றது.

***

சுதேசமித்திரன் பத்திரிகையில் காணப்படும் ஆகாய விமான விவரம்:—

இப்பொழுது உலகத்தில் இருக்கும் ஆகாயவிமானங்களின் தொகை 17,000. அவற்றுள் 14,000 யுத்த காரியங்களுக்கானவை. மற்றைய 3,000 வியாபாரப் போக்குவரவிற்கு உபயோகமானவை. பல்வேறு நாடுகளில் உள்ள ஆகாயவிமான விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| பிரான்ஸ் ... ... | 2549 |
| ஸ்விட்ஜர்லாண்டு ... ... | 140 |
| அர்ஜன்டைனின் ... ... | 50 |
| ஜப்பான் ... ... | 500 |
| பின்லாந்து ... ... | 70 |
| அல்பானியா ... ... | 10 |
| ஸ்பெயின் ... ... | 600 |
| இத்தாலி ... ... | 1000 |
| ஹாலண்டு ... ... | 120 |
| சில்லி ... ... | 500 |
| பிரேஸில் ... ... | 230 |
| கிரீஸ் ... ... | 50 |
| ஈரான் ... ... | 10 |
| நார்வே ... ... | 80 |
| ஆப்கனிஸ்தானம் ... | 10 |
| துருக்கி ... ... | 100 |
| லோம்டானியா ... ... | 50 |
| லெக்பரிஸ்லோடியா ... | 259 |
| டென்மார்க் ... ... | 50 |
| அமெரிக்கா ... ... | 1640 |
| பரத்கால் ... ... | 120 |
| பெரு ... ... | 50 |
| ருமேனியா ... ... | 180 |
| யோகோஸ் லேவியா ... | 50 |
| ருஷ்யா ... ... | 700 |
| ஸ்வீடன் ... ... | 100 |
| ஸ்தோனியா ... ... | 30 |

பிரிட்டிஷாருக்குச் சொந்தமான விமானத் தொகை தெரியவில்லை.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (உதாரணங்க ளுடன்)—மூன்று பாகம் ... ரூ. அ. 18 8

தமிழ்மொழி அகராதி
The Coronation Tami Dictionary ... ... 10 0

### தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.

வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள்

எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. வி. பி. செலவு வேறு. விலை ரூபா 6 0 0.

## :: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 800-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணா 12.

கலாநிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

## நன்கறிந்த ஜீவன் - - - - - - ச்யவன் ப்ராஷ்

நிகரற்ற ஆயுர்வேத டானிக். இருமல், சளி,




ஆஸ்த்மா, பிதிஸிஸ் முதலிய வியாதிகளுக்கு நல்ல மருந்து. இரத்தத்தை விருத்திசெய்து ஞாபகசக்தியைக் கூர்மைப் படுத்தும். நீண்ட ஆயுளும் தேக ஆரோக்கியமும் நல்ல சக்தியும் தரவல்லது.

விலை:—1 பவுன் ரூ. 2-8-0. ½ பவுன் ரூ. 1-5-0.
பாகிங் தபால் செலவுகள் வேறு.

குஜராட் ஆயுர்வேத பார்மஸி, அகமதாபாத்; என்னுமிடத்தில் செய்யப்பட்டது.

ஸோல் ஏஜெண்ட்ஸ்:—

**சீதாராம் மெடிகல் ஸ்டோர்ஸ்,**
87. நயனியப்ப நாயகன் தெரு,
பார்க் டவுன், சென்னை.

குறிப்பு:—மெடிகல் அட்வைஸ் இனாமாகக் கொடுக்கப்படும். பதிலிற்கு ஒரு அணா தபால் தலை அனுப்பவும். காட்லாக் இனாம்.

ஒட்டக்கூத்தர் பாடிய

## தக்கயாகப் பரணி

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரியநூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | |
|---|---|---|
| பால காண்டம் ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் ... | ரூ. | 5. |

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலா நிலயம்",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)